இந்த விலைக்கழிவு நாரஹேஹன்பிட்ட எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK SINCE 1909 JAPAN
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 04 சோபகிருது வருடம், ஆனி மாதம் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(27.06.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 08, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

BEAT the HEAT
The Reliable Fan
1st June to 30th June 2023
DISCOUNT 15% (On selected models only)
*Conditions apply
KDK SINCE 1909 JAPAN
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

# இலங்கை நெருக்கடிக்கு சீனாவும் காரணம்!

## தென் சீனக் கடலில் சீனாவின் அச்சுறுத்தல் அதிகரிப்பென தாய்வான் வெளியுறவு அமைச்சர் ஜோசப் வூ குற்றச்சாட்டு



'தென் சீனக் கடல் பகுதியில் சீனாவின் அச்சுறுத்தல் வேகமாக அதிகரித்து வருகிறது. இதனைத் தடுக்க அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் முன்வர வேண்டும்' என்று தாய்வான் வெளியுறவு அமைச்சர் ஜோசப் வூ தெரிவித்தார்.

தைபேயில் சர்வதேச ஊடகங்களைச் சந்தித்த அவர் மேலும் கூறியதாவது,

தென் சீனக் கடலில் உரிமையுள்ள அனைத்து நாடுகளுமே சீனாவுக்கு எதிராக அவசரமாக கைகோர்க்க வேண்டிய நேரமிது. ஏனெனில், தென் சீனக் கடல் பகுதியில் சீனாவின் அச்சுறுத்தல் வேகமாக அதிகரித்து வருகிறது. அந்த பிராந்தியத்தில் சீனாவின் போர்க் கப்பல்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. இதனைத் தடுக்க அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் முன்வர வேண்டும். இதற்கு அனைத்து வகையிலும் உதவ தாய்வான் தயாராக உள்ளது.

சீனாவால் இந்திய வடக்கு எல்லை, பல ஆண்டுகளாக அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது. இப்போது சீனாவால் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்திலும் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. மியன்மார், பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளின் துறைமுகங்களை தனது கட்டுப்பாட்டில் எடுக்கும் நடவடிக்கையை சீனா தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இலங்கையின் பொருளாதார சீர்குலைவுக்கு ஒரு வகையில் சீனாவும் முக்கிய காரணம். தனது சுயநலத்துக்காக பிற சிறிய நாடுகளை சீனா பயன்படுத்திக் கொள்ளத் தயங்குவதில்லை. நமது பிராந்தியத்தில் அனைவரும் சீனாவுக்கு எதிராக ஒன்றிணைய வேண்டும். 02 பக்கம்

# லிட்ரோ விலை ஜூலையில் குறையும்




கே. சுபானி

லிட்ரோ எரிவாயுவின் விலை எதிர்வரும் ஜூலை 05ஆம் திகதி முதல் மீண்டும் குறைக்கப்படவுள்ளதாக நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் நேற்று (26) அறிவித்துள்ளார். 02 பக்கம்

# தோட்டாக்கள் உள்நாட்டில் உற்பத்தி

நா. தினுஷா

நாட்டில் 30 வருடகால யுத்தம் இடம்பெற்றிருந்தாலும் அதன் போது எமது பாதுகாப்புக்குத் தேவையான ஆயுதங்களை எம்மால் உற்பத்தி செய்ய முடியாத நிலைமையே இருந்தது. ஆனால், தற்போது எமது பாதுகாப்புக்குத் தேவையாக தோட்டாக்களை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கான ஆயத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (25) இடம்பெற்ற தேசிய... 02 பக்கம்

# இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள கடன் மறுசீரமைப்பு பேச்சுகள்

## அதனாலேயே வங்கிகளுக்கு விடுமுறை வழங்கப்படுவதாக மத்திய வங்கி ஆளுநர் அறிவிப்பு

நா. தினுஷா

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக சில செயன்முறைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கு சில நாட்கள் தேவைப்படுவதாலேயே வெள்ளிக்கிழமை உள்ளடங்களாக வங்கிகளுக்கு தொடர்ச்சியாக ஐந்து.... 02 பக்கம்




# தேசபந்துவின் அழைப்பாணை இரத்து

நா. தினுஷா

ஜனாதிபதி மாளிகைக்குள் போராட்டக்காரர்கள் நுழைந்த சந்தர்ப்பத்தில் அங்கிருந்த ஒருகோடியே 78 இலட்சம் ரூபாவுக்கும் அதிக நிதியை கண்டுபிடித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபராக ஆஜராகுமாறு அறிவித்து கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு விடுக்கப்பட்டிருந்த அழைப்பாணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (26) இரத்துச் செய்தது. தேசபந்து தென்னகோனினால் முன்வைக்கப்பட்ட ரிட் மனு தொடர்பில் தீர்ப்பளித்தே மேன்முறையீட்டு... 02 பக்கம்

# நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்

## விமான நிலையத்தில் விசேட பாதுகாப்பு



பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நேற்று (26) காலை நாடு திரும்பினார்.

ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக்குழுவினர் நேற்றுக் காலை 09.10 மணியளவில்... 02 பக்கம்



# இரகசியமாக நாட்டை முடக்கி தீர்மானமெடுக்க அரசு முயற்சி

## ஜீ.எல். பீரிஸ் குற்றச்சாட்டு

தேசிய கடன் மறுசீரமைப்பு செய்வதற்கான அநீதியான செயற்பாடுகளுக்காக நாட்டை இரகசியமாக முடக்கிவிட்டு அவசரத் தீர்மானமொன்றை எடுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதனால் நாட்டு மக்களே பாரதூரமான சிக்கலை சந்திக்க நேரிடும். மக்களை ஏமாற்றிவிட்டு அவர்களின் நோக்கங்களை மிகவும் புத்திசாலித்தனமாக சாதித்துக்கொள்ளவே அரசாங்கம் செயற்பட்டு வருவதாக சுதந்திர மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தரும் பாராளுமன்ற... 02 பக்கம்

# கட்சித் தலைவர்கள் கூட்டம் ஒத்திவைப்பு

நா. தினுஷா

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இன்று (27) இடம்பெறவிருந்த கட்சித் தலைவர்கள் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கட்சித் தலைவர்களுடன் இன்று கலந்துரையாடிவிட்டு எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பாராளுமன்ற விவாதத்தை முன்னெடுப்பதற்கே இதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்ததாகவும் ஆனால்,... 02 பக்கம்

# கால்நடைகளுக்கான தடை வடமேல் மாகாணத்தில் நீக்கம்

கண்டி செய்தியாளர்

வடமேல் மாகாணத்தில் கால் நடைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை தற்காலிகமாக நீக்கியுள்ளதாக வடமேல் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களப் பணிப்பாளர், மிருக வைத்தியர் பீ.சி.எஸ். பெரேரா தெரிவித்தார்.

வடமேல் மாகாண ஆளுநர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போது கால் நடைகளைத் தாக்கி வரும் வைரஸ் நோய் வடமேல் மாகாணத்தில் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கடந்த 24ஆம் திகதி முதல் தடை உத்தரவு தளர்த்தப்பட்டதாகவும் மீண்டும் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டால் தடை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 02 பக்கம்

# நாய்க் கடிக்குள்ளாகும் இரண்டு இலட்சம் பேர்

## சுகாதார அமைச்சு தகவல்

கே. சுபானி

நாட்டில் ஆண்டொன்றுக்கு 2 இலட்சத்து 40 ஆயிரம் பேர் விசர்நாய்க் கடிக்குள்ளாவதாக சுகாதார அமைச்சின் விபத்து தடுப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. மேலும், ஆண்டொன்றுக்கு மூன்று இலட்சம் பேர் விலங்குக் கடிக்குள்ளாவதுடன் அவர்களுள் ஒரு இலட்சம் பேர் கடுமையான பாதிப்புகளை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 02 பக்கம்



# முறையான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை

## அஸ்வெசும நிவாரணம் தொடர்பில் சஜித் குற்றச்சாட்டு



அரசாங்கத்தின் அஸ்வெசும நிவாரணத் திட்டத்துக்கு பயனாளிகளை தெரிவு செய்து சலுகை வழங்குவதில் பெரும் சிக்கல் நிலவுவதாகவும் முறையான கணக்கெடுப்புடன் இதனை... 02 பக்கம்



அஸ்வெசும நலன்புரித் திட்டத்தில் முறைகேடு இடம்பெறுவதாக குற்றஞ்சுமத்தி அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக வீதியை மறித்து பொதுமக்கள் நேற்று (26) பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

படப்பிடிப்பு: சி. திவியா

### கமெண்ட் கந்தர்...



நாட்டில
பிச்சைக்காரங்களுக்கு கூட
நிம்மதியில்ல பாருங்கோ..!

# பிச்சைக்காரர்களுக்கு விரைவில் இடமாற்றம்

## காலிமுகத்திடலிலிருந்து ஹம்பாந்தோட்டைக்கு அனுப்பப்படுவர்



கொழும்பு, காலிமுகத்திடலில் உள்ள பிச்சைக்காரர்களை ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் ரிதியகமவில் உள்ள சமூக சேவைகள் புனர்வாழ்வு நிலையத்துக்கு மாற்றுவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். 02 பக்கம்

### உஷ்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய அரசாங்கத்தின் சலுகைகளை பெற்றுவருவதுதொடர்பில் முன்னாள் எம்.பி முஜிபுர் ரஹ்மான் அடிக்கடி குற்றஞ்சாட்டி வருகிறார் அல்லவா?

இதனால் கடும் விசனமடைந்துள்ள கோட்டாபய, முஜிபுர் ரஹ்மானுக்கு தொலைபேசி அழைப்பை எடுத்து தனது கவலையை தெரிவித்து புலம்பியதாக தகவல்.

தன்னைப்பற்றி ஊடகங்களில் செய்திகள் தினசரி வெளிவருவதால், அரசாங்கத்தின் சலுகைகள் கிடைப்பதற்கு ஆப்பு வந்துவிடும் என்று கருதுகிறாராம் கோட்டா. அதை அவரே தனது நெருக்கமானவர்களிடம் கூறி கவலைப்பட்டாரெனக் கேள்வி.

## தேசபந்துவின்...

நீதிமன்றின் தலைமையை நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகியோர் தலைமையிலான நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதேவேளை, கடந்த வருடம் மே மாதம் 09ஆம் திகதி காலிமுகத்திடல் 'கோட்டா கோ கம' போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரொருவராக தேசபந்து தென்னகோனை பெயரிடுமாறு நீதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள கடிதத்தை அதிகாரபூர்வமற்றதாக்கி மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் ரிட் கட்டளை வெளியிடப்பட்டுள்ளது.

## கட்சித் தலைவர்கள்...

தற்போது கட்சித் தலைவர்கள் கூட்டத்தை வெள்ளிக்கிழமை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் பிரதான எதிர்க்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் 28ஆம் திகதி இடம்பெறவுள்ள அமைச்சரவையில் கலந்துரையாடி அனுமதியை பெற்றுக்கொண்டதன் பின்னர், கடன் மறுசீரமைப்பு தொடர்பான தீர்மானங்களை எதிர்வரும் வியாழக்கிழமை அல்லது வெள்ளிக்கிழமை பாராளுமன்ற நிதி பற்றிய அலுவல்கள் குழுவில் சமர்ப்பிப்பதற்கே இதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறிருக்கையில், தற்போது அரசாங்கம் என்ன நிலைப்பாட்டில் இருக்கிறது என்பதை அறியமுடியவில்லை என்றும் பிரதான எதிர்க் கட்சி குற்றச்சாட்டு முன்வைத்துள்ளது.

இந்நிலையில், தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பான எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்று (26) இடம்பெற்றிருந்தது. அதன்போது, மேற்குறிப்பிட்ட விடயங்கள் குறித்து தீர்க்கமாக ஆராயப்பட்டுள்ளன.

இந்த கலந்துரையாடல் தொடர்பில் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, கடன் மறுசீரமைப்பு தொடர்பான விபரங்கள் இதுவரையில் எங்களிடம் சமர்ப்பிக்கப் படவில்லை. செஹான் சேமசிங்க, ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆகியோர் கடந்த காலங்களில் முன்வைத்திருந்த நிலைப்பாடுகளுக்கும் தற்போது எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் பரஸ்பர வேறுபாடுகள் இருக்கின்றன.

தேசிய கடன் மறுசீரமைப்பு செய்ய வேண்டாம் என்பது எங்களின் நிலைப்பாடாகும். அதனையும் மீறி செயற்படுவதானால் கடன் தொகையை இல்லாமலாக்கக் கூடாது என்பதே எங்களின் யோசனையாகும். ஆகவே, ஜனாதிபதி இந்த விடயம் தொடர்பில் பரந்தளவில் பார்க்க வேண்டும். சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் பிரதானியாவார். சகல விடயங்களுக்கும் அவர் எதிர்ப்பு தெரிவித்ததும் இல்லை.

சர்வதேச நாணயத்தின் உதவியை பெறுவதற்கு சஜித் பிரேமதாச உள்ளிட்ட நாங்கள் எதிர்த்து வாக்களிக்கவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட தரப்பினரை முழுமையாக கலந்துரையாடலிலிருந்து ஓரங்கட்டுவது ஆரோக்கியமான விடயமாகும் என்று குறிப்பிட்டார்.

## லிட்ரோ விலை ஜூலையில்...

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

லிட்ரோ எரிவாயுவின் விலை தொடர்ந்தும் நான்காவது முறையாகவும் எதிர்வரும் 05ஆம் திகதி முதல் குறைக்கப்படவுள்ளது.

இதன்படி 12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலைக்கு நிகராக ஏனைய இரு எரிவாயு சிலிண்டர்களின் விலைகளும் குறைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இறுதியாக 12.5 கிலோகிராம் நிறைகொண்ட எரிவாயு சிலிண்டரின் விலை 452 ரூபாவால் குறைக்கப்பட்டு மூவாயிரத்து 186 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

அதேபோன்று, 05 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் 181 ரூபாவால் குறைக்கப்பட்டு ஆயிரத்து 281 ரூபாவுக்கும் 2.3 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்ட ரின் விலை 83 ரூபாவால் குறைக்கப்பட்டு 598 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாய்க் கடிக்குள்ளாகும்...

இவ்வாறு அனைத்துவிதமான விலங்கு கடிக்குள்ளாவோரின் சிகிச்சைகளுக்காக ஆண்டுதோறும் ஒரு பில்லியன் ரூபா அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இதுகுறித்து சுகாதார அமைச்சின் விபத்து தடுப்புப் பிரிவின் பிரதானி, விசேட வைத்தியர் சமித சிறிதுங்க மேலும் தெரிவிக்கையில்,

விலங்குக் கடிக்குள்ளாகும் ஒருவருக்கு பெற்றுக்கொடுக்கப்படும் நான்கு வகையான தடுப்பூசிகளுக்காக 10ஆயிரம் ரூபா செலவிடப்படுகிறது. அத்தோடு அதற்கும் மேலதிகமாக பெற்றுக்கொடுக்கப்படும் மருந்துகளுக்காக ஒரு இலட்சம் ரூபாவரை செலவிடப்படுகிறது.

இந்நிலையில், நாட்டில் ஆண்டொன்றுக்கு விலங்கு கடிக்குள்ளாவோரில் 80 சதவீதமானோர் விசர்நாய்க் கடிக்குள்ளானோர் என சுகாதார அமைச்சின் விபத்து தடுப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி ஆண்டொன் றுக்கு 2 இலட்சத்து 40ஆயிரம் பேர் விசர்நாய்க் கடிக்குள்ளாகின்றனர். இவ்வாறான அனர்த் தங்களில் 50 சதவீதமான அனர்த்தங்கள் வீட்டில் இடம்பெறும் அனர்த்தங்களாகும். ஆகவே, வீட்டில் ஏற்படும் இவ்வாறான ஆபத்துகள் தொடர்பில் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## நாடு திரும்பினார்...

எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் விமான சேவைக்கு சொந்தமான ஈ.கே. 650 ரக விமானத்தின் ஊடாக டுபாயில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை 5.30 மணிமுதல் கட்டுநாயக்க விமான நிலையத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. ஜனாதிபதியுடன் இந்த விஜயத்தில் கலந்துகொண்டிருந்த ஒரு தொகுதியினர் நேற்றுமுன்தினம் நாட்டை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## கால்நடைகளுக்கான...

எனவே வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த குளியாப்பிட்டிய, பன்னல, கட்டுப்பொத்த, பிங்கிரிய, மஹவ. கல்கமுவ, கிரிபாவ, கொப்பேகன, நிக்கவரட்டிய, எஹெடு வெவ, அம்பன்பொல, கொட்டவெஹெர, புத்தளம் பிரதேசத்திலுள்ள சகல கால்நடை சுகாதார அதிகாரி பிரிவுகள் என்பனவற்றில் மேற்படி தடை தளர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அஸ்வெசும தொடர்பில் அதிருப்தியில் மொட்டு

## ஜனாதிபதி ரணிலுக்கு எழுத்துமூலமாக அறிவிக்கவும் ஏற்பாடு

சமுர்த்தி உதவிதொகை கிடைக்கவேண்டிய குடும்பம் தொடர்பில் மேன்முறையீடு செய்யப்படாவிட்டால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி என்ற அடிப்படையில் அதற்காக முன்வந்து செயற்பட தயாராக இருப்பதாகவும் அஸ்வெசும வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடுவதற்கும் எழுத்துப் பூர்வமாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் நேற்று (26) தெரிவித்தார்.

நிதி செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட அரச சார்பில்லாத நிறுவனமொன்றினால் பெற்றுக் கொள்ளப்பட்ட நபர்களினால் முன்னெடுக் கப்பட்ட அஸ்வெசும வேலைத்திட்டத்தில் கணக்கெடுப்பு செய்த முறை தொடர்பில் பிரச்சினை இருப்பதாகவும் மேன்முறையீடு செய்வது தொடர்பில் ஒருசிலருக்கு பிரச்சினை ஏற்படக் கூடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உதவித் தொகை பெறக்கூடியவர்களின் பெயர்களை நீக்கியது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் மற்றும் அமைப்பாளர்களினால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. கோவிட் தொற்று பரவலடைந்த காலப்பகுதியில் மக்களுக்கு உதவித் தொகையை பகிர்ந்தளிக்கும்போது வீடுகளின் அடிப்படையில் அல்லாமல் குடும்பத்தின் அடிப்படையில் வழங்குவதற்கு காரணம் ஒரே வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்வதாலாகும். அஸ்வெசும என்பது குறுகிய கால வேலைத்திட்டமாகும். ஆகையால் அஸ்வெசும வேலைத்திட்டத்துக்கு அப்பால் சென்று சமூக ரீதியாக உதவித் தொகையை பெற்றுக்கொடுப்பதற்கு ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை நெருக்கடிக்கு...

சீனா விடயத்தில் இந்திய அரசு உரிய கவனத்துடன் செயல்பட்டு வருகிறது. ஜனநாயக நாடுகள் அனைத்துக்குமே சீனாவால் அச்சுறுத்தல் உள்ளது என்றார்.

தாய்வான் தங்கள் நாட்டின் ஒரு மாகாணம் என்று சீனாவில் ஆளும் சீன கம்யூனிஸ்ட் கட்சி கூறி வருகிறது. சுயாட்சியுடன் திகழும் தாய்வானை தங்கள் நாட்டுடன் இணைக்க ஆயுத பலத்தையும் பயன்படுத்த தயங்க மாட்டோம் என்று சீனா ஏற்கெனவே எச்சரித்துள்ளது. 1949 இல் நடைபெற்ற சீன உள்நாட்டுப் போருக்கு பிறகு தாய்வான் தனிநாடாக அறிவித்து செயல்பட்டு வருகிறது. ஆனால், சீனா இதை ஏற்கவில்லை.

## பிச்சைக்காரர்களுக்கு...

காலி முகத்திடலில் உள்ள பிச்சைக்காரர்களால் உள்ளூர்வாசிகள், சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்டோர் சிரமங்களை எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாக இவ்வாறானதொரு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பொழுதுபோக்குக்காக காலி முகத்திடலில் கூடும் சுற்றுலாப் பயணிகள், குடும்பத்துடன் வருவோர் ஆகியோருக்கு பிச்சைக்காரர்கள் இடையூறு விளைவிக்கிறார்கள். அங்கு சுமார் 150 பிச்சைக்காரர்கள் காணப்படுகிறார்கள். இவர்களை இடமாற்ற வேண்டிய தேவை எழுந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## தோட்டாக்கள் உள்நாட்டில்...

தொழிற்துறை கண்காட்சி நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பாதுகாப்பு பிரிவின் உற்பத்தி நிலை தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தியுள்ளோம். எமது நாட்டில் 30 ஆண்டுகள் போர் நிலைமை இருந்தது. ஆனால், ஒரு தோட்டாவைக் கூட உற்பத்தி செய்தது இல்லை. இருந்தபோதும், எமக்கு தேவையான தோட்டாக்களை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். வெளிநாட்டு தொழில்நுட்பங்களை பயன்படுத்தினாலும் எமக்கான, எமது பாதுகாப்புக்காக இந்த தொழிற்துறையை எமது நாட்டிலேயே ஆரம்பித்துள்ளோம்.

2022ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதி பிணைமுறிகள் வழங்கப்பட்டன. அதேபோன்று, எமது நாட்டில் ஏற்பட்டிருந்த நிலைமைத் தொடர்பில் புதிதாக குறிப்பிடவும் ஒன்றுமில்லை. இலங்கை, ஸிம்பாபே, ஆர்ஜன்டீனா, லெபனான், எத்தடோ, கிறீஸ், வெனிசுவேலா நாடுகளே இவ்வாறு பிணைமுறிகளை வழங்கியுள்ளன. ஆசியாவில் முதன் முறையாக இலங்கையே பிணை விடுவித்துள்ளது.

இந்த நெருக்கடி சிறியளவானது அல்ல. பல தசாப்தங்களாக பல்வேறு பிரச்சினைகளினால் உருவான பின்விளைவுகளாகும். நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமெனில் பல தசாப்தங்களாக பின்பற்றி வந்த நம்பிக்கைகள், உலகத்தை பார்க்கும் விதம், உலகம் மீதான புரிந்துணர்வை நாம் மாற்றிக்கொள்ள வேண்டும்.

எமது தேயிலை தொழிற்துறை 150 வருடங்களுக்கு பழைமையானதாகும். 1.5 மில்லியன் வரையிலானவர்கள் தேயிலை தொழிற்துறையுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புபட்டுள்ளார்கள். இன்னும் எமது நாட்டுக்கு 1.4 பில்லியன் ரூபாவுக்கு அதிகமான வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையே நிலவுகிறது. ஆனால், ஒரு தேயிலை கன்றைக் கூட நாட்டாத நாடான டுபாய் இன்று தேயிலை மத்திய நிலையமாகவுள்ளது. இதுதொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும்.

தொழிலாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் நம்பிக்கையை கட்டியெழுப்பி புதிய வகையில் சிந்தித்து புதிய முறையில் செயற்படுவதற்கு பழக வேண்டி ஏற்படும். அவ்வாறு இல்லாவிட்டால், மீண்டும் நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொண்டாலும் எமது சந்ததியினால் எதிர்காலத்தில் நெருக்கடியையே சந்திப்பார்கள்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசியல், பொருளாதாரம், சமயம், கலாசாரம் என்பவற்றை ஒரே பார்வையில் வைத்திருந்தால் எம்மால் முன்னேறிச் செல்ல முடியாது. சீனாவை எடுத்துக் கொண்டால் அதன் அரசியல் தன்மையும் பொருளாதாரத் தன்மையும் ஒன்றிலொன்று வேறுபட்டவையாகும் என்றார்.

## முறையான கணக்கெடுப்பு...

மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி பரிந்துரைத்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்க்கட்சி ஒன்றியத்தின் வாராந்த செயற்குழுக் கூட்டத்தில் நேற்று (26) கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

Verite Research நிறுவகம் கூட சுட்டிக் காட்டியது போல் மின் நுகர்வு அடிப்படையில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டால் இது அறிவியல் பூர்வமாக சரியான தெரிவாக அமையும்.

LIRNE asia நிறுவகம் 13 மாவட்டங்களில் 10ஆயிரம் குடும்பங்களை மையமாக வைத்து நடத்திய கணக்கெடுப்பின் பிரகாரம், நாட்டின் வறியோர் மக்கள் தொகை 14 சதவீதத்தில் இருந்து 31 சதவீதமாக 17 வீதத்தால் அதிகரித்துள்ளது. முப்பது இலட்சத்தில் இருந்து வறியோர் எண்ணிக்கை 70 இலட்சமாக உயர்ந்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த தெரிவு முறையால், 70 இலட்சம் வறியோர் தொகையில் ஒரு பகுதியினருக்கு இந்த நலன்புரி நிவாரணங்கள் கிடைக்காது போகும் நிலை மேலெழுகின்றது. அஸ்வெசும வேலைத்திட்டம் என்பது கண்ணை மூடி நலன்புரி நன்மைகளை நீக்கும் வேலைத்திட்டமாகும்.

இத்திட்டத்தை ஆரம்பிக்கும்போது எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி பரிந்துரைத்த மின் நுகர்வின் அடிப்படையில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தால் 80 சதவீதத்துக்கும் மேல் இது வெற்றி பெற்றிருக்கும். தரவுகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட அறிவியல்பூர்வமான முடிவாக இருந்தாலும் எந்த அறிவியல் அடிப்படையும் இல்லாமல், பயனடைய வேண்டியவர்களுக்கு பலன் அளிக்காமலும் பயனடையக் கூடாதவர்களுக்கு இதனூடாக பலன்களை வழங்கியும் இந்த அரசாங்கம் அஸ்வெசும திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

அஸ்வெசும திட்டம் சிறப்பாக இருந்தாலும் அதை செயல்படுத்தும் விதத்தில் முழுமையாக தோல்வியடைந்துள்ளது. இது சீர்செய்யப்பட வேண்டும். இதற்கான அடிமட்ட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

வறியோரில் ஒரு சிலருக்கே இதன் பயன்கள் கிடைக்கப்பெறுகின்றன. வறியோர்களின் அதிகளவானவர்களுக்கு இது இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கம் சரியான கணக்கெடுப்பை நடத்தவில்லை. அரசாங்கத்தின் முட்டாள்தனமான கொள்கையினாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

குடும்ப அலகொன்றின் வருமானத்தையும் செலவீனங்களையும் மீளாய்வு செய்வது இன்றியமையாதது எனவும் வறிய மக்கள் யார் என்பதனை சரியாக கருத்திற் கொள்ளப்பட்டு சரியாக கணக்கெடுத்து வறுமைக்கோட்டு தரவு மேற்கொள்ளப்பட்டே ஆக வேண்டும் என்றும் மாகாண, மாவட்ட, பிரதேச மட்டத்தில் குடும்ப அலகு ஒன்றுக்கான வருமானத்தையும் செலவீனங்களையும் மீளாய்வு செய்து வறிய மக்கள் யார் என்பதனை சரியாக கணக்கெடுக்குமாறும் அஸ்வெசும திட்டத்தில் பலர் நீக்கப்பட்டுள்ளனர் என்பது தெளிவாக புலப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அஸ்வெசும திட்டத்தில் பயனாளிகள் வகைபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் மாதாந்தக் கொடுப்பனவு வேறாக்கப்பட்டுள்ளதாகவும் இது அடைவுகளை சுட்டிக்காட்டாது காலம் வரையறுக்கப்பட்ட ஓர் திட்டமாகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஜூனியர் தமிழன்

மாணவ மாணவிகளே!

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் வெற்றிக்கு வழிவகுக்கும் முன்னோடி வினாத்தாள்கள் மற்றும் விடைத்தாளுடனான விசேட பொதி




பிரபல புலமைப்பரிசில் ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்படுகிறது

பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு!

பிரதிகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

0777983308 / 0761393805

## இரகசியமாக நாட்டை...

உறுப்பினருமாக ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (26) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தேசிய கடன் மறுசீரமைப்புக்கு பல்வேறு வழிமுறைகள் இருக்கின்றன. எந்த முறையில் மறுசீரமைப்பு பணிகளை செய்தாலும் மக்களுக்கு ஏற்படும் இழப்புக்குள் ஒருபோதும் குறையாது. அதனை நிச்சயமாக எதிர்கொண்டே ஆகவேண்டும். முதலில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆகியனவே முதலில் தாக்கத்தை சந்திக்கும். அவற்றின் நிதி வளம் திறைசேரியின் கணக்கு பட்டியல் மற்றும் பிணைமுறிகளே முதலீடுகளாக அமைந்துள்ளன. நூற்றுக்கு 85 சதவீதம் திறைசேரியின் முதலீடாகும்.

இதனூடாக நிச்சயமாக தேசிய வங்கி கட்டமைப்பின் நிலைப்பேறு தன்மைக்கு பாதிப்பு ஏற்படும். ஆனால், இதனால் எந்த சிக்கலும் ஏற்படாது, கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளில் எந்த குறைபாடும் இல்லை என்று மத்திய வங்கியின் ஆளுநர் கூறுகின்றார். தேசிய கடன் ஒருபோதும் மறுசீரமைப்பு செய்யப்படாது என்று அவரே இந்த நாட்டுக்கு அறிவித்திருந்தார். அவ்வாறு இருக்கையில், இதிலிருக்கும் நம்பகத்தன்மை என்ன?

ஆகவே, இது பொய் என்றால் பின்விளைவுகள் தொடர்பில் ஒரு நம்பகமான நிலைப்பாட்டை உருவாக்கிக்கொள்ள முடியும். 79 இலட்சம் மக்கள் உணவுத் தேவைக்காக வீடுகளிலிருக்கும் தளபாடங்களை விற்பனை செய்வதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின்றன. நாட்டில் என்றாவதொரு நாள் இந்நிலை ஏற்பட்டது இல்லை.

இந்த பின்னணியிலேயே தேசிய கடன் மறுசீரமைப்புச் செய்யும் அநீதியான செயற்பாடுகளுக்காக நாட்டை இரகசியமாக முடக்கிவிட்டு அவசர தீர்மானமொன்றை எடுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதன் பின்னர் எம்மால் முன்னோக்கிச் செல்ல முடியாது. இதனையே, மக்களை ஏமாற்றிவிட்டு மிகவும் புத்திசாலித்தனமாக சாதித்துக்கொள்ள அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

சகல கடன் உரிமையாளர்கள் தொடர்பிலும் ஓரேமாதிரியான கொள்கையை பின்பற்றுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அவ்வாறெனில், தேசிய கடன் தொடர்பில் விசேட தன்மைக் குறித்து கவனம் செலுத்துவதில்லை என்பதே இதன் பொருளாகும். வெளிநாட்டு கடன் உரிமையாளர்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தை போன்றதொரு செயற்பாடுகள் இல்லாமல், தேசிய கடன் உரிமையாளர்கள் தொடர்பில் சற்று மாறுபட்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இந்நிலை வெளிநாடுகளுக்கு ஏற்பட்டபோது அவர்கள் மிகவும் சாணக்கியத்தனமாக நடந்துகொண்டன. 20 நாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடியிருந்தன. ஆனால், அந்நாடுகள் தேசிய கடன் மறுசீரமைப்புக்கு ஒத்துக்கொள்ளவில்லை. அவர்களில் ஆறு நாடுகள் வங்குரோத்து நிலையிலிருந்திருந்தாலும் அவர்களும் தேசிய கடன் மறுசீரமைப்புக்கு ஒப்புக்கொள்ளவில்லை.

நாணய நிதியத்தின் உதவியை நாடுவதற்கு முன்னர், எமது நாட்டின் நிலைப்பாடே அவசியமாகும். எதற்கு இணங்க வேண்டும் எதற்கு இணங்கக் கூடாது என்பதே அவசியமாகவுள்ளது. அதுதொடர்பில் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படவேண்டும். அரசியல் ரீதியாக ஏதாவதொரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும் என்பதே இந்த அரசாங்கத்தின் தேவைப்பாடாக இருக்கிறது என்றார்.

## இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள...

நாட்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடுமுறையினால், இயந்திரம் மற்றும் ஒன்லைன் அல்லது இணைய வாயிலான பணக் கொடுக்கல் வாங்கல்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்றும் மேலும், தேசிய கடன் மறுசீரமைப்பு செயன்முறைகளினால் வங்கிகள் அல்லது வேறு வைப்பு நிறுவனங்களில் இருக்கும் மக்களின் இருப்பு பணத்துக்கோ அல்லது அவற்றுக்கான வட்டிப்பணத்துக்கோ எந்த பாதிப்பும் ஏற்படாது என்றும் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

மத்திய வங்கியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் (25) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நிதி அமைச்சு, மத்திய வங்கி உள்ளிட்ட தரப்பினர் கலந்துரையாடி இறுதித் தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளது. அதனை நடைமுறைப்படுத்துவதற்கு குறிப்பிட்ட காலப்பகுதி முழுமையாக தேவைப்படுகின்றது.

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் எட்டப்பட்டுள்ள தீர்மானங்களை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அமைச்சரவை அனுமதியை பெற்று பாராளுமன்ற குழுக்களுக்கு சமர்ப்பித்து, அதுதொடர்பிலான விவாதங்களை முன்னெடுக்க குறிப்பிட்ட காலம் தேவைப்படும். இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு 4- 5 நாட்கள் தேவைப்படும்.

இந்த காலப்பகுதியில் கலந்துரையாடல்கள் இடம்பெறுவதுடன் சந்தையில் குறிப்பாக அரச திறைசேரி கணக்குகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய வங்கிகளின் பங்கு சந்தை மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

இதுபோன்ற நடவடிக்கைகளுக்காகவே நீண்ட விடுமுறை அவசியமாக இருக்கிறது. நிதி அமைச்சுக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்படி, அதற்கான செயன்முறைகள் இந்த குறுகிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்படவேண்டும். இந்த செயற்பாடுகளுக்கு இடையில் ஒரு தினத்தில் சந்தைகள் செயற்படும். எனவே, அந்த குறித்த தினத்தில் சந்தைகளின் செயற்பாட்டை தவிர்ப்பதனூடாக, இந்த கலந்துரையாடலுக்கு தேவையான காலத்தை முழுமையாக பெற்றுக்கொடுக்க கூடியதாக இருக்கும்.

அதற்கமைய, எதிர்வரும் 30ஆம் திகதி அரச விடுமுறை அறிவிக்கப்படுவதால் தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் சந்தைகளின் செயற்பாடுகள் இடம்பெறாது. அந்த காலப்பகுதியில் இந்த செயன்முறைகளை இறுதி செய்ய முடியும் என்பதாலேயே வெள்ளிக்கிழமை வங்கி விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு அப்பால் வேறு காரணங்கள் எதுவும் இல்லை.

வங்கி விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தாலும், வழமையாக இடம்பெறும் ஏ.ரி.எம். மற்றும் சி.ரி.எம். இயந்திரங்கள் மூலமான கொடுக்கல் வாங்கல்கள், ஒன்லைன் அல்லது இணைய வாயிலான பணக் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறும். அந்த சேவைகளுக்கு எந்த சிக்கலும் ஏற்படாது. ஒருசில வங்கிகள் விடுமுறைகளிலும் இயங்கும். அதனை வார இறுதி வங்கிச் சேவை என்று குறிப்பிடுவோம். அந்த கொடுக்கல் வாங்கலுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

இது நீண்டகால வங்கி விடுமுறை என்றாலும், மக்களுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். அதேபோன்று, இந்த விடுமுறையினால் மக்களின் வைப்பு பணத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஒருசிலர் குறிப்பிடுகிறார்கள். தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளுக்கமைய தேசிய வங்கி மற்றும் வங்கியல்லாத நிறுவனங்களில் இருக்கும் வைப்பு பணம் அல்லது அதற்காக கிடைக்கும் வட்டி பணம் என்பவற்றுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்பதை மத்திய வங்கியென்ற அடிப்படையில் தெளிவாக குறிப்பிடுகிறோம்.

இதுதொடர்பான தெளிவான விபரங்கள் விடுமுறை நிறைவடைந்ததும் பாராளுமன்றத்தில் பகிரங்கமாக அறிவிக்கப்படும். அதுவரையில், இதன் உள்ளடக்கங்கள் குறித்து கலந்துரையாடுவது பொருத்தமானதாக இருக்காது. ஆகவே, வைப்பிலுள்ள பணத்தில் குறைப்போ அல்லது வட்டி குறைப்போ இடம்பெறாது. தேசிய கடன் மறுசீரமைப்பின்போது வங்கி கட்டமைப்புகளின் உறுதிப்பாடு மற்றும் வங்கிகளிலிருக்கும் மக்களின் வைப்பு பணத்துக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்பதை உறுதியாக கூறிக்கொள்ள விரும்புகிறேன் என்றார்.

# நலன்புரி உதவித் திட்ட பதிவுகளில் முறைகேடு: வவுனியா மாவட்ட செயலகம் முன் ஆர்ப்பாட்டம்

## ஏ9, மன்னார் வீதிகளும் மக்களால் முடக்கம்





வவுனியா நிருபர்

அரசாங்கத்தின் நலன்புரி உதவித் திட்ட பதிவுகளில் முறைகேடு எனத் தெரிவித்து வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் முன் மக்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், ஏ9 வீதி மற்றும் மன்னார் வீதிகளும் மக்களால் முடக்கப்பட்டன.

இவ் ஆர்ப்பாட்டம் நேற்று திங்கட்கிழமை (26) காலைமுதல் மதியம்வரை இடம்பெற்றது.

அரசாங்கத்தினால் நலன்புரி உதவித்திட்ட கொடுப்பனவுகள் வழங்குவதற்கான பெயர்ப்பட்டியல் அண்மையில் வெளி வந்திருந்த நிலையில் இரு நேரம் மட்டும் உணவை உட்கொண்டு வாழ்பவர்கள், விசேட தேவைக்குட்பட்டவர்கள், முதியோர், விதவைகள் உட்பட்ட வறுமைக் கோட்டுக்குட்பட்டவர்களின் பெயர்கள் உள்வாங்கப்படாமல் வெளிநாடுகளில் இருப்போர், அரச உத்தியோகத்தர்கள், வசதியானவர்களுக்கே கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்தே இவ் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டிருந்தது.

வவுனியா பிரதேச செயலக வளாகத்தினுள் காலை 9.30 மணியளவில் கள்ளிக்குளம், தேக்கவத்தை, நெளுக்குளம், தோணிக்கல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமக்கு நீதி கோரி போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். அதன் பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் கோரிக்கைகளை வவுனியா பிரதேச செயலாளர் ந.கமலதாசன் போராட்ட இடத்துக்குச் சென்று கேட்டறிந்ததுடன், முறைப்பாடுகளை மேற்கொள்ளுமாறும் தாம் நியாயமான முறையில் விசாரணைகளை முன்னெடுப்பதாகவும் பொது மக்களிடம் தெரிவித்திருந்தார்.

எனினும், வவுனியா பிரதேச செயலாளரின் தீர்வு தமக்கு திருப்தியில்லை என தெரிவித்து காலை 10.30 மணியளவில் பிரதேச செயலகம் முன்பாக வவுனியா - மன்னார் பிரதான வீதியை வழிமறித்த மக்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இதனால் அப்பகுதியூடான போக்குவரத்து 11.00 மணிவரை ஸ்தம்பிதமடைந்திருந்தது.

அத்துடன், வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்தின் வாயிலின் முன்பாக சிங்கள மக்களும் வவுனியா மாவட்ட செயலக வாயிலின் முன்பாக கூமாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த மக்களும் காலை 10.00 மணி தொடக்கம் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

அதன் பின்னர் போராட்டத்தில் ஈடுபட்ட மூன்று தரப்பினரும் காலை 11.30மணியளவில் ஏ9 வீதியில் பண்டாரவன்னியன் சதுக்கம் முன் ஒன்றுகூடி வவுனியா - மன்னார் பிரதான வீதி மற்றும் ஏ9 வீதி ஆகிய இரு பிரதான வீதிகளையும் மறித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுடன் பொலிஸ் உயர் அதிகாரிகள் பல தடவைகள் கலந்துரையாடியும் தொடர்ந்தும் மக்கள் வீதியை மறித்து போராட்டத்தை தொடர்ந்திருந்தனர். இதனையடுத்து, கொக்குவெளி இராணுவ முகாம் கட்டளைத் தளபதியும் போராட்ட இடத்துக்கு வருகை தந்து வீதியை விட்டு மக்களை விலகுமாறும் அரசாங்க அதிபரிடம் கலந்துரையாடுவதற்கு தாம் ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்தார்.

அதன் பின்னரும் தொடர்ந்தும் பொதுமக்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்ததுடன் பிற்பகல் 12.30 மணியளவில் மாவட்ட அரசாங்க அதிபர் பணிமனையினுள் போராட்டகாரர்கள் உள்நுழைந்திருந்தனர்.

அரசாங்க அதிபர் காரியாலயம் முன்பாக ஒன்று கூடியவர்களுடன் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர கலந்துரை யாடியதுடன், அவர்களின் கோரிக்கையினை கேட்டறிந்து கொண்டார்.

அரசாங்கத்தினால் நலன்புரி உதவித்திட்ட கொடுப்பனவுகள் வழங்குவதற்கான பெயர்ப் பட்டியல் ஆரம்ப பட்டியல் மாத்திரமே இது. இறுதிப்பட்டியல் இதுவரை வெளியாகவில்லை.

இது தொடர்பில் முறைப்பாடுகளை இணையம்மூலம் மேற்கொள்ள முடியும். அல்லது கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு எமது உத்தியோகத்தர்கள் வருகை தருவார்கள். அவர்களிடம் வழங்குமாறும், கிராம உத்தியோகத்தர்களின் விஜயம் தொடர்பான திகதியை வெளியிடுவதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்ததுடன், அதன் பின்னரே இறுதி பட்டியல் வெளியிடப்படும் எனவும் அரசாங்க அதிபர் உறுதிமொழி வழங்கியதையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கலைந்து சென்றிருந்தனர்.

# இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

## 6ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை தாய்லாந்தில்



இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (SLTFTA) தொடர்பான ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நேற்று (26) காலை கொழும்பில் ஆரம்பமானது.

கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்ற ஆரம்ப அமர்வில் கருத்துத் தெரிவித்த சர்வதேச வர்த்தக அலுவலகத்தின் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவின் பிரதான பேச்சாளர் கே.ஜே. வீரசிங்க, உடன்பாடு காணப்பட்ட காலவரையறையின்படி நடைமுறைப்படுத்தப்படுகின்ற இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து திருப்தியடைய முடியும்.

அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை தாய்லாந்தில் ஓகஸ்ட் 21 முதல் 23 வரை நடைபெறும். 2024 மார்ச்சில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். 2024ஆம் ஆண்டு பெப்ரவரியில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இறுதிப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக மேலும் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நாளை 28ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது என்றார்.

உலகளாவிய பொருளாதாரத்துடன் இணைவதற்கான இலங்கை அரசாங்கத்தின் நோக்கத்தையும் பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்தில் (RCEP) அங்கம் வகிப்பதற்காக, இலங்கையின் பொருளாதார பிரவேசத்தை முதலில் தெற்காசியாவிலும் பின்னர் அதை கிழக்கு நோக்கியும் விரிவுபடுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்பார்ப்பை தாய்லாந்து துதுக்குழுவிடம் வீரசிங்க விளக்கினார்.

பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்தில் (RCEP)இணைவதற்கு இலங்கை தாய்லாந்தின் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் வீரசிங்க கூறினார்.

தாய்லாந்தின் வர்த்தக பேச்சுவார்த்தைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவுரமன் சுப்தாவிதும் ஒன்லைன் தொழில்நுட்பத்தின் ஊடாக பங்குபற்றியதோடு, இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் போஜ் ஹர்ன்பொல (Poj Harnpol) உள்ளிட்ட தாய்லாந்து பிரதிநிதிகள் சர்வதேச ஊடகத்துறை தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஷேனுகா செனவிரத்ன , ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் சாந்தனி விஜயவர்தன, பிரதி பிரதான பேச்சாளர் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எஸ்.டபிள்யூ.சி. ஜயமினி உள்ளிட்ட இலங்கை பிரதிநிதிகள் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# வாகன விபத்து: 20 பேர் படுகாயம்; ஐவர் கவலைக்கிடம்

## அவிசாவளையில் சம்பவம்

அவிசாவளை செய்தியாளர்





அவிசாவளை புஸ்ஸல்ல ஆசிரியர் பயிற்சி நிலையத்துக்கு அருகில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் 20 பேர் காயமடைந்துள்ளதுடன் ஐவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி-கொழும்பு பிரதான வீதி புஸ்ஸல்ல ஆசிரியர் பயிற்சி நிலையத்துக்கு அருகில் தனியார் பஸ் சொகுசு பஸ் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இச்சம்பவம் நேற்றுக் (26) காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தில் 20 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் ஐவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான சொகுசுப் பஸ் முன்னோக்கி நகர்ந்தமையினால் பாதை ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் வேன் மீது மோதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





டிஜிட்டல் வங்கி முறைமையின் சிறப்புமிகு அனுபவம்

இலங்கை வங்கித்துறையில் டிஜிட்டல் முறைமையின் முன்னோடியான 'மக்கள் வங்கி' தனது புதிய சேவை நிலையத்தை **இல. 10ஆம் தூண், முல்லை வீதி, விஷ்வமடு** எனும் முகவரியில், நவீன வசதிகளுடன்கூடிய, பரிபூரண உயர் வங்கிச் சேவையினைப் பெற்றுத் தரும் நோக்கில் திறந்து வைத்துள்ளது.

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK Pride of the Nation

A (lka) ஃபிட்ச் ரேட்டிங், AAA- பிராண்ட் ஃபினான்ஸ் ரேட்டிங்
மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.


# தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆனி மாதம் 12ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்:** பகைவர்கள் விலகிச் செல்வார்கள். கேட்ட பணம் இன்று கிடைக்கப்பெற்று நினைத்த காரியத்தை சாதிப்பீர்கள்.

**ரிஷபம்:** போட்டிப் பந்தயங்களில் வெற்றி வாய்ப்பு உண்டு. குழந்தைகளால் மகிழ்ச்சியும் இலாபமும் உண்டு.

**மிதுனம்:** வாழ்க்கை முன்னேற்ற வேலைகளை இன்று ஆரம்பிப்பீர்கள். கணவன் மனைவி அந்நியோன்யமாக இருப்பார்கள்.

**கடகம்:** பண வருவாய்க்கு குறை இருக்காது. எதையும் துணிவுடன் சாதித்து வெற்றி அடைவீர்கள்.

**சிம்மம்:** குடும்பத்தில் சுப காரியங்களுக்காக செலவுகளைச் செய்வீர்கள். மன மகிழ்ச்சி உண்டு.

**கன்னி:** நல்ல உணவு, உறக்கம் அமையும். பரிசுப் பொருட்கள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**துலாம்:** ஆணவத்தால் பல தொல்லைகளை அனுபவிப்பீர்கள். பயணங்களின் போது கவனம் வேண்டும்.

**விருச்சிகம்:** பொருள் தன வரவால் மகிழ்ச்சி உண்டு. நினைத்த காரியத்தில் வெற்றியும் இலாபமும் உண்டு.

**தனுசு:** தொழில் முயற்சிகளில் வெற்றி கிட்டும். நண்பர்கள் மூலம் கேட்ட பண உதவிகள் கிடைக்கும்.

**மகரம்:** வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் சிரமங்கள் தோன்றும். கடின உழைப்பு உடல் அசதியைத் தரும்.

**கும்பம்:** உடல் நோய்களால் சற்று சிரமப்படுவீர்கள். தன பொருள் இழப்புகளை இன்று சந்திக்க வேண்டி வரும்.

**மீனம்:** வாகனத்தால் நன்மையும் மனைவி மூலம் இலாபங்களும் உண்டு. மிகவும் கௌரவமாக நடத்தப்படுவீர்கள்.

**திதி:** நவமி பி.இ.3.05 வரை பின் தசமி (வளர்)
**நட்சத்திரம்:** அஸ்தம் பி.ப.2.43 வரை பின் சித்திரை
**யோகம்:** சித்த யோகம் பி.ப.2.43 வரை பின் மரணயோகம்
**வார சூலை:** வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:** மு.ப. 7.54– 8.54 மணிவரை
**ராகுகாலம்:** 2.54 – 4.24 மணிவரை
**எமகண்டம் :** 8.54–10.24 மணிவரை
**குளிகை:** 11.54– 1.24 மணிவரை
**சந்திராஷ்டமம்:** கும்ப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தன அதிர்ஷ்டம்:** கார்த்திகை, உத்தரம், உத்தராடம், ரோஹிணி, அத்தம், திருவோணம் (பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்:**-------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஜூன் 27ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# அமைச்சர் விதுரவின் கையில் கடிவாளம்!

''தொல்பொருளியல் விவகாரத்தில் பௌத்த தேரர்கள் தலையிடுவதை நிறுத்த வேண்டும். அவர்களது செயற்பாடுகளினால் தான் வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள மக்களுக்கு காணி அபகரிப்பு குறித்த வீண் அச்சம் ஏற்படுகிறது. இதுகுறித்து பௌத்த தேரர்களிடம் பல சந்தர்ப்பங்களில் நேரடியாகத் தெரிவித்த போதும், அவர்கள் அதனை ஏற்கவில்லை'' என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பகிரங்கமாகவே தெரிவித்திருக்கிறார்.

தொல்பொருளியல் எனக் கூறி வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. இது தொடர்பில் ஊடகங்கள் வினவியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

''தொல்பொருளியல் என்பது சட்டத்துக்குட்பட்ட விடயமாகும். தொல்பொருள் கட்டளை சட்டம் இன்றும் நடைமுறையிலுள்ளது. அதனை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். அத்தோடு இந்த விவகாரத்தில் பௌத்த தேரர்களும், அரசியல்வாதிகளும் தலையிடுவதையும் நிறுத்த வேண்டும். சட்டத்துக்கமைய தொல்பொருள் திணைக்களத்துக்கு மாத்திரம் அதன் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இடமளிக்க வேண்டும்.

அதனை விடுத்து தொல்பொருள் திணைக்களம் ஆய்வுகளை முன்னெடுக்கும் பகுதிகளுக்குச் செல்லும் சில பௌத்த தேரர்களால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் காரணமாக வீண் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே, இந்த விடயங்களில் தலையிடுவதை அவர்கள் நிறுத்த வேண்டும்'' என விதுர விக்கிரமநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிலவிய காலகட்டங்களில் தேசிய பாதுகாப்பு (National Security) எனக்கூறி வடக்கு, கிழக்கு மாகாண மக்களுடைய இடங்கள் அரசாங்கத்தின் மூலம் பறிமுதல் செய்யப்பட்டன. அதேபோல் தற்போது தேசிய, சொத்து பாரம்பரியம் (National Heritage, Archaeology) என்ற போர்வையில் முன்புபோல் மக்களுடைய காணிகள் பறிமுதல் செய்யப்படுகின்றன.

குறிப்பாக தொல்பொருள் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகிய அரச நிறுவனங்கள் சிறுபான்மை மக்களின் இடங்களை பெற்று அவற்றை பெரும்பான்மையினருக்கு வழங்குகின்ற செயற்பாடே மேற்கொள்ளப்படுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக ஆட்சியில் இருந்தபோது கிழக்கு மாகாண தொல்பொருள் திணைக்களத்தினால் 375 பகுதிகள் வரலாற்று இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டன. குறிப்பாக, திருகோணமலை மாவட்டத்தில் 74 இடங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 28 புத்த விகாரைகள் உட்பட 55 இடங்களும், அம்பாறை மாவட்டத்தில் 246 இடங்களும் பௌத்த சமய வரலாற்றுடன் தொடர்புடையவையாக அடையாளப்படுத்தப்பட்டன. ஆனால், இவை அனைத்துமே தமிழர்களின் பூர்வீக பகுதிகள். அதனைச் சான்றுபகரும் வகையில் மாவட்ட ரீதியான பல உதாரணங்கள் உள்ளன. குறிப்பாக குச்சவெளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கந்தசாமி மலை முருகன் ஆலயம், கன்னியா வெந்நீரூற்று ஆகியன ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இலங்கைத்துறை முகத்துவாரம், லங்காபட்டின என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதோடு, குஞ்சிதபாத மலையில் இருந்த பாலமுருகன் ஆலயம் இடிக்கப்பட்டு பௌத்த விகாரை கட்டப்பட்டுள்ளமை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

பிரித்தானியரிடம் இருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது முதல் வட, கிழக்கு மாகாணங்களில் தமிழ் - முஸ்லிம் மக்கள் செறிந்து வாழ்கின்றமை என்ற விடயம் ஆட்சியாளர்களுக்குப் பெரும் தலையிடியாகவே இருந்துவந்துள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள இன விகிதாசாரத்தையும் நிலப்பரப்பையும் மாற்றி அங்குள்ள மாவட்டங்களை பௌத்த மயமாக்குவதே ஆட்சியாளர்களின் நோக்கமாகும். தொல்பொருட்கள் பாதுகாக்கப்பட வேண்டியது கட்டாயமானது. ஆனால், தொல்பொருள் என்ற போர்வையில் திரைமறைவு அரசியல் நோக்கங்களே அரங்கேறுகின்றன.

1949இல் இலங்கையில் முதலாவது பல்நோக்கு அபிவிருத்தித் திட்டமான கல்லோயா முதல் கந்தளாய், மகாஓயா உட்பட 1977இல் உருவான துரித மகாவலித் திட்டம் வரையில் மாறி மாறி வந்த ஆட்சியாளர்களால் 24 சிங்கள குடியேற்றத்திட்டங்கள் கிழக்கில் அமைக்கப்பட்டன. டி.எஸ்.சேனநாயக்க, ஜே.ஆர்.ஜயவர்தன, காமினி திசாநாயக்க, லலித் அத்துலத் முதலி என அன்றைய தலைவர்களும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர் இல்லை என்ற வகையில் பல்வேறு வடிவங்களில் கிழக்கிலங்கையில் தமது ஆக்கிரமிப்புகளை முன்னெடுத்துள்ளனர். இதற்கு பௌத்த பிக்குகளின் பேராதரவு இருந்துவந்துள்ளது.

தொல்பொருள் என்பது ஒரு தேசத்தின் வரலாறு அல்லது அத்தேசத்தின் பண்டைய மக்களுடைய வாழ்க்கை முறையின் வெளிப்பாடு. இலங்கை பூராகவும் கண்டுபிடிக்கப்படுகின்ற மற்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சகல தொல்பொருட்களினதும் உரிமை காணப்படுவது இலங்கை மக்களுக்கு ஆகும். அது இலங்கை வரலாற்றின் பிரதிபலிப்பேயன்றி ஒரு குறிப்பிட்ட இனக்குழுவினருக்கு மாத்திரம் சொந்தமானதல்ல.

அகழ்வாராய்ச்சிகளின் போது கண்டுபிடிக்கப்படுகின்ற புராதன பௌத்த சின்னங்கள் போன்றே தமிழ்க் கோயில்களும் முஸ்லிம்களின் கல்லறைகளும் கூட இலங்கையின் தொல்பொருள் அடையாளங்களாகும். ஒரு குறிப்பிட்ட குழுவிற்கு மாத்திரம் தொல்பொருள் என்பதை ஒருபோதும் வரையறுக்க முடியாது.

இரண்டாயிரம் - மூவாயிரம் வருடங்கள் பழைமையான தொல்பொருள் சான்றுகள் உள்ளன எனக்கூறி 100 வருடங்களாக மக்கள் வழிபட்டு வந்த கோயில்களை மூடுவதும் இனிமேல் உங்களால் அங்கே செல்ல முடியாது எனக் கூறுவதும் எந்த விதத்தில் நியாயம்? அதேபோல் தலைமுறை தலைமுறையாக விவசாயம் செய்து வந்த மக்களின் காணிகளை தொல்பொருள் என்ற போர்வையில் அபகரித்து அவர்களுடைய வாழ்வாதாரத்தையே நிலைகுலையச் செய்வதன் நோக்கம்தான் என்ன? மரபுரிமை முகாமைத்துவம் என்பது தொல்பொருட் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டதும் அங்கிருந்து மக்களை பலவந்தமாக அகற்றி குறித்த காணிகளை அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதல்ல. பௌத்த பிக்குமாரின் செயற்பாடுகளை இப்போதாவது புரிந்துள்ள அமைச்சர் விதுர அதற்குக் கடிவாளமிடுவாரா?



# வண்ணங்கள் தரும் வளமான வாழ்வு!

வண்ணம், வடிவம், அமைப்பு இந்த மூன்றிற்கும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புண்டு.

வண்ணங்களைப் பற்றி அறிவியல் நெடுங்காலமாக ஆராய்ந்து வந்துள்ளது. வண்ணங்கள் வாழ்க்கை முழுவதும் நெருங்கிப் பரவி இருப்பதை நாம் நன்கு அறிவோம்.



வண்ணங்கள் இல்லாத வாழ்க்கையை ஒரு கணம் நினைத்துப் பார்த்தால் மனம் திடுக்கிடும். வாசலில் வண்ணமிகு கோலம் வரவேற்காது. பெண்கள் மற்றும் ஆண்களின் உடைகள் மனதைக் கவரும் வண்ணத்தில் இருக்காது. வண்ணத்தில் ஜொலிக்கும் தீபாவளியும், ஹோலி பண்டிகையும், கிறிஸ்மஸும் பொலிவிழந்து இருக்கும். வண்ணச் சிற்பங்கள், சித்திரங்கள், வண்ணத் திரைப்படங்கள் இருக்காது என்றால் வாழ்க்கையே சலிப்புத் தட்டி விடும். நமது முன்னோர்கள் இதை உணர்ந்துதான் வண்ணங்களின் பெருமையை நமக்கு எல்லாவற்றின் மூலமாகவும் விளக்கி வந்துள்ளனர்.

ஒவ்வொரு தேவதைக்கும் ஒரு வடிவம், அமைப்பு என்பதோடு இன்ன வண்ணமும் உண்டு என்று குறிப்பிட்டிருக்கின்றனர். ஒவ்வொரு எழுத்திற்கும் உள்ள நிறத்தை நரசிம்ம புராணம் விளக்குகிறது. வண்ணம், வடிவம், அமைப்பு இந்த மூன்றிற்கும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புண்டு. இந்தத் தொடர்பை உணர்ந்து நமது வாழ்க்கையை நாம் அமைத்துக் கொண்டோமானால் வெற்றிதான் பெறுவோம்.

### அறிவியல் ஆய்வில் வண்ணங்கள்

வண்ணங்களைப் பற்றி அறிவியல் நெடுங்காலமாக ஆராய்ந்து வந்துள்ளது. சாலைச் சந்திகளில் ஏன், சிவப்பு விளக்கு நிற்கவும் பச்சை விளக்கு போவதற்கான அனுமதி தரவும் நிறுவப்பட்டிருக்கிறது?

அறிவியல் சோதனை இந்த வண்ணங்களை வைத்து நடத்தப்பட்டது. சோதனைக்குட்பட்டோரின் கண்களைக் கட்டிவிட்டு அவர்களுக்கு இரு புறமும் சமதூரத்தில் சிவப்பு வண்ண அட்டை ஒரு புறமும் பச்சை வண்ண அட்டை மறு புறமும் வைக்கப்பட்டன. தங்களது உள்ளுணர்வு சக்தி மூலம் சோதனைக்கு உட்பட்டோர் எந்த அட்டை அருகில் இருக்கிறது என்று கூறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். வண்ண அட்டைகள் இரண்டுமே சம தூரத்தில் வைக்கப்பட்டிருந்த போதிலும், சிவப்பு அட்டை அருகில் இருப்பதாகவும் பச்சை அட்டை தூரத்தில் இருப்பதாகவும் கூறப்பட்டது. ஆகவே, தான் உடனே நிற்க உத்தரவிட சிவப்பு நிறம் பயன்படுத்தப்படுகிறது.

"லஞ்ச் இடைவெளி – ஒரு நிமிடம்" இன்னொரு சோதனையில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டோர் ஒரு குளிர் அறையில் உட்கார வைக்கப்பட்டனர். அவர்கள் அருகில் ஒரு பொத்தான் வைக்கப்பட்டது. அறையின் உஷ்ணநிலை அதிகரிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும் நிலையில், உடலுக்கு இதமான உஷ்ணநிலை வந்தவுடன் பொத்தானை அழுத்தி வெப்பம் அதிகரிப்பதை நிறுத்துமாறு கூறப்பட்டது. வெவ்வேறு சோதனைகளில் வெவ்வேறு வண்ணங்கள் சோதனை அறையில் பூசப்பட்டன. சோதனை முடிவில் ஆரஞ்சு அல்லது சிவப்பு வண்ணம் பூசப்பட்ட அறையில் மனதிற்கு இதமான உஷ்ணம் வந்ததாக அறிவிக்கப்பட்டது. இது நீல நிற வண்ணம் பூசப்பட்ட அறையை விட 15 பாகை செல்சியஸ் முன்பாகவே இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இன்னொரு உளவியல் சோதனையில் இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு ஆகியவற்றைச் சாதாரண வெளிச்சத்தில் பார்ப்பதற்கும் சிவப்பு வண்ண ஒளியில் பார்ப்பதற்கும் வேறுபாடு இருப்பது தெரிய வந்தது. சிவப்பு வண்ணத்தில் நாடித்துடிப்பும் இரத்த அழுத்தமும் அதிகரித்திருந்தன. இந்த சோதனைகள் அனைத்தையும் நடத்தியவர் புடாபெஸ்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆண்டல் நெமிசிஸ் என்பவர். இதேபோல வண்ணங்கள் குறித்த சோதனைகளை மேற்கொண்ட பில்டன், ரொபர்ட் மெட்ஸ்கார், ஜோ ரெஜெரேர் ஆகிய விஞ்ஞானிகளும் வண்ணங்கள் பற்றிய தங்கள் ஆய்வு முடிவுகளை அறிவித்தனர். இவை அனைத்துமே வண்ணங்கள் வாழ்க்கைப் போக்கை நிர்ணயிக்கின்றன - மாற்றுகின்றன என்பதைப் புரிய வைத்தது.

பிரபல விஞ்ஞானியான கார்ல் ஜங் தன்னிடம் வந்த நோயாளிகள் அனைவரையும் வண்ணங்களைப் பயன்படுத்துமாறு அறிவுரை கூறுவார். ஏனெனில், அவர்களின் உள்ளார்ந்த உளவியல் அடிப்படையில் அவர்களைப் பற்றிய பல தகவல்களை அந்த வண்ணங்கள் தருமாம். ஒருவரின் ஆளுமையையும் குணாதிசயங்களையும் அவர் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தும் வண்ணங்கள் தெளிவாகக் காட்டும். உள்ளுக்குள்ளேயே எதையும் வைத்திருக்கும் மனப்பாங்கு கொண்டவர் நீலத்தைத் தேர்ந்தெடுப்பார். வெளிப்படையாக எதையும் பேசும் ஒருவர் சிவப்பைத் தேர்ந்தெடுப்பார். நீங்கள் அணிந்திருக்கும் ஆடையிலுள்ள நிறங்கள் உங்களைப் பற்றிய பல தகவல்களைத் தருகின்றன. அது அந்தச் சமயத்தில் நீங்கள் கொண்டிருக்கும் உணர்வுகளையும் சுட்டிக் காட்டுகின்றன.

வண்ண மயமான சந்தைப்படுத்தல் இப்போது பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளின் பொதிகளிலும் விளம்பரங்களிலும் வண்ண ஆராய்ச்சி முடிவுகள் தந்த அறிவுரைகளைப் பின்பற்றி வருகின்றன. வாடிக்கையாளர்களை வண்ணங்கள் ஊக்குவித்து தயாரிப்புகளை வாங்க வைத்து விற்பனையை அதிகரிக்க வைக்குமாம்..! அதேபோல் பிரபல உணவு விடுதிகளில் மஞ்சள் மற்றும் சிவப்பு வண்ணம் அடித்திருப்பதைப் பார்க்கலாம். அது பசி உணர்வைத் தூண்டி அதிகம் சாப்பிட வைக்கும். வாடிக்கையாளர்கள் வேகமாகச் செயற்பட்டு உணவை முடித்துக் கொண்டு அவர்களை உடனே வெளியே போகவும் வைக்குமாம். உலகப் பெரும் உணவு நிறுவனமான மெக்டொனால்ட்ஸின் அடையாளச் சின்னமானது, சிவப்பு நிற பின்னணியில் மஞ்சள் நிற எழுத்தைக் கொண்டிருப்பது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். சிவப்பு வண்ணம் அடிக்கப்பட்ட ஒரு அறை அதன் அளவை விட மிகச் சிறியதாகத் தோற்றம் அளிக்கிறது! ஆனால் நீல நிற அறையோ அதன் அளவை விடப் பெரியதாகத் தோற்றம் அளிக்கிறது. நீல நிறத்தை மேற்புறம் கொண்ட ஒரு அறை மன சாந்தியைத் தரும்.

ஆகவே, நோயாளிகள் மற்றும் மன அழுத்தம் உள்ளவர்களுக்கு ஏற்ற வண்ணம் இதுவே. நீலம், பச்சை, இளஞ்சிவப்பு அடிக்கப்பட்ட அறைகள் பச்சிளம் குழந்தைகளுக்கு உகந்தவை.

### வண்ண சிகிச்சை (கலர் தெரபி)

தியோ ஜெம்பல் என்ற ஜெர்மானியர் நவீன வண்ண இயல் மூலமாக நோய்களைத் தீர்ப்பதில் வல்லவர். ஒலியை விட வண்ணங்கள் அதிக அதிர்வுகளை ஏற்படுத்துவதாக இவர் நிரூபித்ததோடு, அந்த அளவுகளையும் தெரிவித்தார். வண்ண சிகிச்சைக்கு இசை வல்லுநர் ஒருவரின் துணையையும் அவர் மேற்கொண்டார். சூரியனுடைய ஒளி பூமிக்கு வர எட்டரை நிமிடங்கள் ஆகும். ஆனால், சூரியன் என்று நினைத்தவுடனேயே அந்த எண்ணம் சூரியனை தொடர்பு படுத்துவதால் அந்த எண்ணத்தின் வேகம் சூரிய ஒளியின் வேகத்தை விட அதிகம் என்று கூறும் இவர் வண்ணங்களின் வேகம், அவை உடலில் ஏற்படுத்தும் மாற்றங்கள் பற்றி விரிவாக எடுத்துரைக்கிறார். தாவரங்களின் வளர்ச்சியிலும் வண்ணங்களுக்குப் பங்கு உண்டு என்பதையும் அவர் எடுத்துரைக்கிறார். கலர் தெரபி என்பது வண்ணங்களை வைத்துச் செய்யப்படும் ஒரு சிகிச்சை முறையாகும்.

இதை எழுதியுள்ள மேரி ஆண்டர்சன் இந்து யோகம் கூறும் அவுரா எனப்படும் ஒளிவட்டம் பற்றி விவரிக்கும்போது உடலின் ஆறு ஆதார சக்கரங்களுக்கும் வண்ணங்களுக்கும் உள்ள தொடர்பை விவரிக்கிறார். ஏழு வண்ணங்களை உபயோகித்து வாழ்க்கையை வெற்றிகரமாக மாற்றிக் கொள்ளலாம் என்கிறார். கிரகங்களும் வர்ணங்களும் குண்டலினி யோகத்தில் உடலில் உள்ள ஆதார சக்கரங்களுக்கு உரிய நிறங்களையும் நமது நூல்கள் கூறுகின்றன. மூலாதாரம் - சிவப்பு, ஸ்வா திஷ்டானம் - ஆரஞ்சு, மணிபூரகம் - பிரகாசமான மஞ்சள், அனாகதம் - பச்சை, விசுத்தம் - நீலம், ஆக்ஞா- கருநீலம், சஹஸ்ராகாரம் - நாவல் நிறம் அல்லது செவ்வூதா நிறம் என்று இப்படி நிறங்களை நூல்கள் தருகின்றன.

இவற்றை அறிவதால் குண்டலினி யோகத்தைச் செய்வோர் தங்களது முன்னேற்றம் பற்றித் தெரிந்து கொள்ளலாம். நவக்கிரகங்களில் சூரியனுக்கு சிவப்பு, சந்திரனுக்கு வெண்மை, செவ்வாய்க்கு சிவப்பு, புதனுக்கு வெளிர் பச்சை, குருவிற்கு மஞ்சள், சுக்கிரனுக்கு வெண்மை, சனி, ராகு, கேது ஆகிய கிரகங்களுக்கு கருமை என நமது அறநூல்கள் கூறுகின்றன. இந்த நிறத்தில் ஆடைகள், நைவேத்யம் ஆகியவற்றைச் செய்வது மரபு. வண்ணமும் அது குறிக்கும் குணமும் குறிப்பிட்ட ஒரு ஆராய்ச்சியாளராக சுமார் 30 வருடங்கள் வண்ண ஆய்விலேயே ஈடுபட்டவர் கலிபோர்னியாவைச் சேர்ந்த மனைசார் உளவியலாளரான டொக்டர் கார்ல்டன் வேக்னர் என்பவராவார். இவரது புத்தகங்கள் உலகமெங்கும் பரவலாக வாசிக்கப்படுகின்றன. அவர் கூறும் அறிவுரைகளைப் பின்பற்றித் தங்கள் பழக்கவழக்கங்களை வெற்றிகரமாக மாற்றிக் கொள்ள விழைவோர் ஏராளம்..! (தி வேக்னர் கலர் ரெஸ்பான்ஸ் மற்றும் கலர் பவர் ஆகிய நூல்கள் குறிப்பிடத்தகுந்தவை) இவர் வண்ண ஆய்வு மையம் ஒன்றை நடத்த ஆரம்பித்து பல்வேறு வண்ணங்களில் ஒவ்வொன்றும் உங்களை உளவியல் ரீதியாக எப்படி பாதிக்கும் அல்லது வளத்தைத் தரும் என்பதைச் சொல்லித் தந்தார்.

அதன்படி ஒவ்வொரு வண்ணத்திற்கான குணங்கள் இதோ: அடர்த்தியான நீலம் (Dark Blue) : நம்பிக்கை, பழைமையில் பற்று, பொறுப்பு, அமைதி, புத்திசாலித்தனம். இளநீலம் (Light Blue) : அமைதி, அன்பு, இலட்சியத்தில் பற்று, தகவல் பரிமாற்றத்தில் நிபுணத்துவம். பச்சை - அமைதி, உண்மை, எதிலும் சமநிலை, உறுதி. மஞ்சள் - உற்சாகம், மலர்ச்சி, புத்திசாலித்தனம், துணிவு, போட்டியில் முதன்மை. வெள்ளை - நேர்த்தி, ஒழுங்கு, சுயதேவை பூர்த்தி, எச்சரிக்கை உணர்வு, ஆன்மீகத்தில் பற்று, ஆக்கபூர்வமான சிந்தனை. கறுப்பு - சோகம், சுகவீனம், தீவிரம், அகங்காரம், மரியாதை, துக்கம், தீமை, தெரியாத விடயங்கள். ஆரஞ்சு - படைப்பாற்றல், மலர்ச்சி, மகிழ்ச்சி, உடனடி செயல். இளஞ்சிவப்பு - அன்பு, ஓய்வு, தாய்ப்பாசம். சிவப்பு - சக்தி, வெற்றி, உடனடி செயல், அமைதியற்ற துடிப்பு, பொறுமையின்மை, தீவிரம். வயலட் - அமானுஷ்ய சக்தி, வசீகரம்.

இதேவேளை தனக்கென ஒரு ராசி நிறத்தை ஒரு ஆணோ பெண்ணோ தமது அனுபவத்தின்படி தேர்ந்தெடுப்பதைப் பார்க்கிறோம். புரூஸ் லீ - மஞ்சள், கருமை. ஐன்ஸ்டீன் - மஞ்சள். சார்லி சாப்ளின் - கருப்பு, நீலம். இவ்வாறு பிரபலங்களும் கூட தங்களுக்கான நிறத்தைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இறுதியாக ஒரு சுவையான தகவல். உலகிலுள்ள மக்களில் பெரும்பாலானோர் விரும்பித் தேர்ந்தெடுக்கும் வண்ணம் எது தெரியுமா? நீலம்..!

(நன்றி - மாலைமலர் )

## இன்றைய நாளில்...

- 1806 – இலங்கையில் கத்தோலிக்கர்கள் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.
- 1954 – இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்பட்டது.
- 1979 – முகமது அலி குத்துச்சண்டைப் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார்.
- 1982 – கொலம்பியா விண்ணோடம் தனது கடைசிப் பயணத்தை மேற்கொண்டது.
- 1998 – கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டது.
- 2013 – சூரியனை ஆய்வுசெய்வதற்காக நாசா விண்கலம் ஒன்றை ஏவியது.



# வாகன விபத்தில் யுவதி உயிரிழப்பு




கொழும்பு – இரத்தினபுரி வீதி உக்வத்தை மயானத்துக்கருகில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் யுவதியொருவர் உயிரிழந்துள்ளதாக அவிசாவளை பொலிஸார் தெரிவித்தனர்.

அவிசாவளை, புவக்பிட்டிய, பிரகதிபுர பகுதியைச் சேர்ந்த தினக்ஷி தில்ஷிகா (23 வயது) என்பவரே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த யுவதி அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த யுவதி மஹரகமவில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிபவர் எனத் தெரியவந்துள்ளது.

அவிசாவளையிலிருந்து ஹங்வெல்ல நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸில் சென்ற குறித்த யுவதி, பஸ்ஸிலிருந்து இறங்கி முன்னோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது அதே பஸ்ஸில் மோதி விபத்துக்குள்ளானதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சாரதி பஸ்ஸை நிறுத்தாது தொடர்ந்து செலுத்தியதால் அதனைப் பின்தொடர்ந்து சென்ற பொலிஸார் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோரைக் கைதுசெய்தனர்.

# களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த திருவிழா

*களுத்துறை நிருபர்*

களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த திருவிழா ehis 29ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து ஐந்து தினங்கள் இடம்பெறும். இதற்கிணங்க அன்றைய தினம் காலை கணபதி ஹோமம், முகூர்த்த உற்சவ பத்திரிகை பாடனம், முகூர்த்தக்கால் நடுதல் நவக்கிரக ஹோமம், அலங்கார பூஜையுடன், மாலை, கிராம சாந்தி, வாஸ்து சாந்தி மற்றும் சண்டேஸ்வரர் பூஜையும் நடைபெறும்.

30ஆம் திகதி காலை 9.15 மணி முதல் 10.26 மணிவரையிலான சுப வேளையில் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிக்கு திருக்கொடியேற்றம், சண்டேஸ்வரர் பூஜையுடன் மாலை விசேட வசந்த மண்டபப் பூஜையும் ஆலய அறநெறி பாடசாலை மாணவர்களின் நாட்டியாஞ்சலி மற்றும் கீதாஞ்சலி நிகழ்ச்சிகளும் முதலாம் திகதி காலை பால்குட பவனி, பால்குட அபிஷேகம், ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி நவோத்தர (1009) தல சக சங்காபிஷேகம் மற்றும் அன்னதானமும் மாலை மாம்பழத் திருவிழாவும் சிறப்பு சைவசமய சொற்பொழிவுகளும் - 02 ஆம் திகதி காலை வசந்த மண்டப பூஜை, இரத பூஜை, இரத கலசப் பூஜை வருடாந்த அலங்கார உற்சவ தேர்பவனியும்- 03ஆம் திகதி காலை தீர்த்தோற்சவம் கொடியிறக்கம் மற்றும் அன்னதானமும் மாலையும் திருக்கல்யாணத்துடன் அன்னதானமும் நடைபெறும். 04ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை திரு மடை பூஜை இடம்பெற்று வைரவர் காப்பு அணிவித்தல் மற்றும் வைரவ பெருமாளின் திருவடைமாலை ஏலம் இடம்பெறும்.

# யாழ். ஊடக அமையத்தில் நினைவேந்தல்




ஊடகவியலாளர் வின்சன் புளோரன்ஸ் ஜோசப்பின் இரண்டாம் ஆண்டு நினை வேந்தல் நிகழ்வு யாழ். ஊடக அமையத் தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அவரது பாரியார் அன்னாரது உருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

# பாரிய மனிதப் புதைகுழிகள் தொடர்பாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குக!

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கோரிக்கை



பாரிய மனிதப் புதைகுழிகள் தொடர்பாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரும் அறிக்கையொன்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான வேலைத்திட்டம், இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் மற்றும் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் ஆகிய மனித உரிமைக்கள் அமைப்புகள் இணைந்து இலங்கையில் மூடிமறைக்கப்படும் பாரிய மனிதப் புதைகுழிகள் பற்றிய ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளன.

இந்த அறிக்கையின் பிரதிகளை தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் நேரில் சென்று கையளித்தனர்.

இந்தச் சந்திப்புகளின்போது இலங்கையில் இடம்பெற்ற இனப் படுகொலை தொடர்பாகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் பாரிய மனிதப் புதைகுழிகள் தொடர்பானதாகவும் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெளிவுபடுத்தினர். இந்த ஆய்வறிக்கையைப் பெற்றுக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயம் தொடர்பாக தாங்கள் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்புவதாகவும் உறுதியளித்தனர்.

இந்நிகழ்வில் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரித்தானியா வாழ் உறவினர்களின் சங்கத்தின் சார்பில் விஜய் விவேகானந்தன், டிலக்ஷன் மனோரஜன், லக்ஷ்மன் திருஞானசம்பந்தர், நிலக்ஜன் சிவலிங்கம், சாருப்பிரியன் ஸ்ரீஸ்கரன், புகழினியன் விக்டர் விமலசிங்கம், மாதவ மேஜர் வேலுப்பிள்ளை, ரோய் ஜக்ஷன் யேசுதாசன், சுபதர்ஷா வரதராசா, சுபமகிஷா வரதராசா, ரஞ்சனி பாலச்சந்திரன், செல்வகுமாரி லோகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உலகின் காணாமல் ஆக்கப்பட்டோரின் வழக்குகளை அதிகமாகக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்தில் இருக்கும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பான ஆராய்ச்சிகளுக்கு இடமளிக்கப்படாது தடை செய்யப்படுகின்ற விடயமானது பாரிய மனிதப் புதைகுழியின் வெளிப்படைத் தன்மையை - அவலங்களை முழுமையாக மறைக்கின்ற செயற்பாடாகவே பார்க்கப்படுகின்றது எனவும் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இரத்தினபுரி தேசிய பாடசாலையில் மாணவர் பாராளுமன்றம்








பாடசாலை மாணவ, மாணவியருக்கு ஜனநாயகம், பொறுப்புணர்வு மற்றும் பொறுப்புக்கூறல், வாக்களிப்பின் முக்கியத்துவம் என்பன தொடர்பில் நடைமுறை ரீதியான அறிவைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இலங்கை பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பொது வெளிக்கள சேவைகள் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாணவர் பாராளுமன்ற நிகழ்வு அண்மையில் இரத்தினபுரி இயேசு பாலகர் கன்னியர் மடம் தேசிய பாடசாலைக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கமைய அங்குரார்ப்பணக் கூட்டத்தில் புதிய சபாநாயகர் தெரிவு செய்யப்பட்டார். அதனையடுத்து அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களின் பதவியேற்பைத் தொடர்ந்து ஒவ்வொரு துறைகள் தொடர்பிலும் கருத்துகளை முன்வைத்து பாராளுமன்ற விவாதமொன்றும் இடம்பெற்றது.

அத்துடன், இந்நிகழ்வில் பாராளுமன்றமும் அதன் சட்டவாக்க செயன்முறைகள் தொடர்பில், பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரும் தொடர்பாடல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளருமான எச். ஈ. ஜனகாந்த சில்வா விசேட உரையாற்றியதுடன் பாராளுமன்ற உறுப்பினர்களின் மக்கள் பிரதிநிதித்துவம் தொடர்பில் பாராளுமன்ற நிர்வாகத் திணைக்களத்தின் பணிப்பளார் ஜீ. தட்சனாராணி விரிவாக விளக்கமளித்தார்.

இந்நிகழ்வில், இரத்தினபுரி கல்வி வலயத்தின் 6 பாடசாலைகளின் மாணவப் பிரதிநிதிகள், விடயங்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் கலந்துகொண்டதுடன் அந்தப் பாடசாலை நூலகங்களுக்கு பாராளுமன்ற முறைமை தொடர்பான தகவல்கள் அடங்கிய நூல்களும் கையளிக்கப்பட்டன.

## அரசியல் கைதிகளை விரைவாக விடுவிக்குக!

### 'குரலற்றவர்களின் குரல் அமைப்பு' வேண்டுகோள்

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 19 தமிழ் அரசியல் கைதிகளின் துரிதமான விடுதலைக்கு அரசும் ஜனாதிபதியும் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரியுள்ளது.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் கடந்த 23ஆம் திகதி விடுதலை செய்யப்பட்ட கனகசபை தேவதாசனை குரலற்றவர்களின் குரல் அமைப்பின் அமைப்பாளர் முருகையா கோமகன் நேற்று திங்கட்கிழமை நேரில் சந்தித்தார்.

குறித்த சந்திப்பு தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த 15 ஆண்டுகள் தமிழ் அரசியல் கைதியாக சிறைப்படுத்தப்பட்டிருந்த கனகசபை தேவதாசன், ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி, கரவெட்டியைச் சேர்ந்த 65 வயதுடைய க.தேவதாசன், இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகக் கடமையாற்றியபோது கடந்த 2008 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கொழும்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இவர் மீது தொடரப்பட்டிருந்த இரண்டு வழக்குகளிலும் முறையே, ஆயுள் தண்டனை மற்றும் 20 ஆண்டுகால சிறைத் தண்டனை என கொழும்பு மேல்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. தனக்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளில் தனக்காகத் தானே மன்றில் முன்னிலையாகி வாதாடியிருந்த தேவதாசன், தனக்கு விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்திருந்தார்.இவ்வாறான நிலையில், அவர் திடீரென தோல் புற்றுநோயினால் பீடிக்கப்பட்டு இரண்டு தடவைகள் சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார்.இந்நிலையில், பல்வேறு தரப்புகளினதும் கூட்டு முயற்சியின் பயனாக கடந்த 23 ஆம் திகதி தேவதாசன் விடுவிக்கப்பட்டுள்ளார்.அரசின் இந்த மனித நேய செயலை வரவேற்கின்ற அதே நேரம், மீதமாயிருக்கின்ற 19 தமிழ் அரசியல் கைதிகளின் துரிதமான விடுதலைக்கு அரசும் ஜனாதிபதியும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முன்னாள் அமைச்சர் சிறில் காலமானார்

முன்னாள் சுகாதார அமைச்சர் பி.எம்.பி.பி. சிறில் நேற்று காலமானார். இவர் சிறிபோபுர பகுதியில் உள்ள தனது வீட்டின் மூன்றாவது மாடிக்கு மின்தூக்கியில் சென்றுகொண்டிருந்தபோது மின்தூக்கி சரிந்து வீழ்ந்து பலத்த காயங்களுக்குள்ளாகினார். இந்நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் சுகாதார அமைச்சருடன் சென்ற அவரது சாரதியும் மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக அப்பகுதி மூத்த பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.முன்னாள் சுகாதார அமைச்சர் இறக்கும் போது அவருக்கு வயது 89 எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வீட்டின் வெளியே பொருத்தப்பட்டிருந்த மின்தூக்கியின் மூலம் மூன்றாவது மாடியில் பழுதுபார்க்கும் பணியைப் பார்வையிடச் சென்றபோதே மேற்படி அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.


**பெயர் மாற்றம்**

நுவரெலியா மாவட்டம் அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சியத்த கங்குல கிராம உத்தியோகத்தர் பிரிவு 320/B, லக்சபான தோட்டம் எமில்டன் பிரிவில் உள்ள யோகேஸ்வரன் கோவிந்தசாமி பிறப்பு சான்றிதழ் இலக்கம் 1031இல் உள்ள எனது பெயரை இன்று முதல் முருகன் யோகேஸ்வரன் என மாற்றியுள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இலங்கை வாழ் மக்களுக்கும் இத்தால் அறியத் தருகிறேன்.

ஒப்பம்.
முருகன்யோகேஸ்வரன்


# வடமராட்சி அல்வாயில் நூல் வெளியீட்டு விழா




படைப்பிலக்கியவாதியும் ஊடகவியலாளருமான லெ. முருகபூபதியின் சினிமா: பார்த்ததும் கேட்டதும் வெளியீட்டு விழா எதிர்வரும் 02 ஆம் திகதி மாலை 4-00 மணிக்கு வடமராட்சி - அல்வாய் கலையகத்தில் எழுத்தாளர் கொற்றை பி. கிருஷ்ணானந்தன் தலைமையில் நடைபெறும்.

யாழ். ஜீவநதி வெளியீடாக வந்துள்ள மேற்படி நூலின் வெளியீட்டுரையை எழுத்தாளர் இ.சு. முரளீதரனும் நூல் நயவுரையை " அலை " யேசுராசாவும் வழங்குவர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.06.25
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 5156
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 21,792,907.00
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கங்கள்: 2 5 3 8 6 6

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம்: 3398
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 65,759,842.00
ஆங்கில எழுத்து: J
வெற்றி இலக்கங்கள்: 06 24 52 55

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 1611
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ.12,946,048.32
வெற்றி இலக்கினம்: விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள்: 8 2 1 2 9 7

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம்: 1186
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 96,959,611.20
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 01 43 54 67

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 465
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 2,500,000.00
வெற்றி இலக்கினம்: மிதுனம்
வெற்றி இலக்கங்கள்: 02 18 45 58
விசேட இலக்கினம்: மிதுனம்

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம்: 1504
அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 332,223,302.00
ஆங்கில எழுத்து: F
சுப்பர் இலக்கம்: 15
வெற்றி இலக்கங்கள்: 08 11 31 67
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

# சமூகச் சீர்கேடுகளை தடுத்து நிறுத்துவதில் பொது அமைப்புகளின் பங்களிப்பு அவசியம்

## யாழ். முன்னாள் அரச அதிபர் மகேசன் கோரிக்கை

சாவகச்சேரி நிருபர்

சமூகச் சீர்கேடுகளை தடுத்துநிறுத்துவதில் சமூக மட்ட பொது அமைப்புகளின் பங்களிப்பு மிக மிக அவசியமென யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபரும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளருமான க.மகேசன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற தென்மராட்சி-மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் 75ஆவது ஆண்டு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சமூக மட்ட அமைப்புகளில் பிரதானமானவை சனசமூக நிலையங்கள். அதற்கடுத்தபடியாக கிராம அபிவிருத்திச் சங்கங்கள் காணப்படுகின்றன. சனசமூக நிலையங்கள் செயற்படுகின்றனவா என மீள்பரிசீலனை செய்தால் சமூகத்தினால் வழிநடத்தப்படுகின்ற இந்த அமைப்புகள் வெறுமனே பெயரளவில் மாத்திரமே காணப்படுகின்றன எனலாம்.

மக்களுக்கு சேவையாற்றி வருகின்ற திணைக்களங்கள் ஊடான சேவையை மக்கள் உரிய விதத்தில் பெற்றுக்கொள்கின்றனரா என்றால் அதில் பாரிய இடைவெளி நிலவுகின்றது. இந்த விடயத்தில் சமூக மட்ட அமைப்புகள் அவதானமாக இருக்கவேண்டும். அதனைக் கண்காணித்து மக்களுக்கு உரிய சேவை கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

வெறுமனே கேள்வி கேட்பவராக இல்லாமல் சமூகம் மீதான பொறுப்புணர்வும் எம் மத்தியில் இருக்கவேண்டும். சில விடயங்களையிட்டு அதிகாரிகளைக் குறை கூறுகின்றோம். அதனைத் தவிர்த்து எமது தேவைகளை நாங்களே நிறைவேற்றுகின்ற மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

எமது சமூகம் என்ற மனப்பாங்குடன் இணைந்து செயலாற்றும்போது எங்களுடைய சகல தேவைகளையும் நிறைவேற்றிக்கொள்ள முடியும். அதற்கு ஒத்துழைப்பாக அதிகாரிகளையும் பயன்படுத்த முடியும். அதிகாரிகளே செய்து தர வேண்டும் என்ற பிடிவாத குணத்தைக் கைவிட வேண்டும்.

சமூக மட்ட அமைப்புகள் ஒற்றுமையாக செயலாற்றும்போது சமூகத்தில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளை உரிய முறையில் அணுகி தீர்வு காண முடியும். எமக்கு கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு போன்றன சவாலாகக் காணப்படுகின்றன. இவற்றை விட சமூக மட்டத்தில் போதைப்பொருள் பாவனை மற்றும் சமூகச் சீர்கேடுகள் பாரிய பிரச்சினைகளாக உள்ளன. இந்த விடயங்களை எதிர்கொள்ள சமூகமட்ட அமைப்புகளின் செயற்பாடு மிக மிக அவசியம். வெறுமனே ஒரு



திணைக்களத்தாலோ அல்லது தனிநபராலோ சமூகப் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்த முடியாது. அதனைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

அத்துடன், சமூகம் இளைய சமுதாயத்துக்கு வழிகாட்டியாகத் திகழ வேண்டும். இளைய சமுதாயத்தையும் இணைத்துக்கொண்டு பயணிக்க வேண்டும். இணைந்து பயணிக்கும்போதுதான் சமூகத்தை மேலும் பொலிவுறச் செய்ய முடியும். அத்துடன், எமது இலக்கையும் அடைய முடியும்.

சமகாலத்தில் நாம் எதிர்கொள்கின்ற சவால்கள் அனைத்தையுமே சமூகமாக ஒன்றிணைந்து வெற்றிகொள்ள முடியும். சமூகமட்ட அமைப்புகள் தமக்குள் பிளவுபடாமல் எதிர்கால சமூகத்தின் நலனுக்காக செயலாற்ற வேண்டியது காலத்தின் கட்டாயம் – என்றார்.

# யாழ். பல்கலைக்கழகத்தில் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு



யாழ். நிருபர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். பொறியியல், விவசாயம் மற்றும் இந்து கற்கைகள் ஆகிய பீடங்களைச் சேர்ந்த மூன்று சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று முன்தினம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்த கூட்டம் நேற்று முன்தினம் (25) ஞாயிற்றுக்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின்படி பொறியியல் பீடத்தின் மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி எம்.கே.அகிலன், மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியல் துறைப் பேராசிரியராகவும் விவசாய பீடத்தின் விவசாய உயிரியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி க. பகீரதன் விவசாய உயிரியல் துறையின் பேராசிரியராகவும் இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவநேசன் இந்து நாகரிகத் துறையின் பேராசிரியராகவும் பதவியுயர்த்தப்பட்டுள்ளனர்.

# ஜோசப் நயனுக்கு இலங்கையின் சிறந்த தொலைபேசி ஊடகவியலாளருக்கான விருது – 2023 வழங்கிவைப்பு

மன்னார் நகர் நிருபர்

இலங்கையில் முதல் முறையாக நடத்தப்பட்ட Srilanka's FIRST Mobile journalisam Festival தொலைபேசி ஊடகவியல் விருது விழாவில் தமிழ், சிங்கள, ஆங்கில கதைகளில் மன்னார் மாவட்ட ஊடகவியலாளர் ஜோசப் நயனின் கதை சிறந்த கதையாகத் தெரிவுசெய்யப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

USAID Sri Lanka,IREX இணைந்து நடத்திய Srilanka's FIRST Mobile journalisam Festival கடந்த சனி மற்றும் ஞாயிற்றுகிழமை இரண்டு நாட்கள் நிகழ்வாக கொழும்பில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சர்வதேச ஊடகவியலாளர்கள் ஊடாக தொலைபேசி ஊடகவியல் தொடர்பிலான தெளிவுபடுத்தல்கள், புதிய நுட்பங்கள் தொடர்பில் இலங்கையிலுள்ள ஊடகவியலாளர்கள் ஆவணப்படத் தயாரிப்பாளர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

அதில் ஒரு பகுதியாக நாட்டின் சிறந்த தொலைபேசி ஊடகவியலாளர்களுக்கான கதை தயாரிப்பதற்கான போட்டி இடம்பெற்ற நிலையில், தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் சமர்ப்பிக்கப்பட்ட 300 கதைகளில்




மன்னார் பேசாலை பகுதியில் மீன்பிடி சார்ந்த உபதொழில்களை மேற்கொண்டுவரும் மீனவப் பெண்கள் தொடர்பாக மன்னார் மாவட்ட ஊடகவியளாலர் ஜோசப் நயனால் உருவக்கப்பட்ட கதை முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது.

குறித்த கதை வெற்றிபெற்றதைத் தொடர்ந்து 2023 சிறந்த மொபைல் ஊடகவியலாளருக்கான விருதும் அதேநேரம், மூன்று இலட்சம் பெறுமதியான பரிசும் USAID நிறுவனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான இயக்குனர் மைக்கல் ஹெய்ன்ஸால் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

# குருநகரில் ஹெரோயினுடன் இளைஞன் கைது

யாழ்.நிருபர்

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞரொருவர் விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குருநகர் ஐந்து மாடி வீட்டுத் தொகுதிக்கருகில் குறித்த இளைஞரை கைதுசெய்து சோதனையிட்டபோது அவரிடமிருந்து 07 கிராம் 05 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்காக யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் இளைஞனையும் மீட்கப்பட்ட போதைப்பொருளையும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஒப்படைத்துள்ளனர்.

# RTI ஊடாக தகவல் கோரியவரிடம் பொலிஸ் ரிப்போர்ட் கேட்ட கொக்குவில் இந்து அதிபர்

யாழ்.நிருபர்

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக தகவலை கோரியவரிடம் கிராம சேவையாளரிடம் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணம், வாக்காளர் இடாப்பில் பிரித்தெடுக்கப்பட்ட பகுதி மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் வழங்கப்பட்ட சான்றுப்பத்திரம் ஆகியவற்றை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண வலய கல்விப் பணிப்பாளர் எழுத்து மூலம் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணம், கொக்குவில் இந்துக் கல்லூரி தொடர்பான சில தகவல்களை நபரொருவர் கடந்த 02 ஆம் மாதம் 14ஆம் திகதி கோரியுள்ளார்.

அதனையடுத்து கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் தகவல் கோரியவரின் கிராம சேவையாளர் ஊடாக வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணம், வாக்காளர் இடாப்பில் பிரித்தெடுக்கப்பட்ட பகுதி மற்றும் பிரதேச பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் வழங்கப்படும் உரிய சான்றுப்பத்திரம் ஆகியவற்றை தனக்கு சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் கோரியுள்ளார்.

அதனடிப்படையில் கொக்குவில் இந்துக்கல்லூரி தொடர்பிலான தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற விரும்பின் கேட்கப்பட்ட ஆவணங்களை சமர்ப்பித்து தகவல்களைக் கோருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

# இருவேறு விபத்துகளில் ஒருவர் உயிரிழப்பு

## பாடசாலை மாணவன் கால்கள் இழப்பு

ஏ.ஏ.எம்.பாயிஸ்

பலாங்கொடை மற்றும் காவத்தைப் பிரதேசங்களில் இடம்பெற்ற இருவேறு விபத்துகளின்போது குடும்பஸ்தர் ஒருவர் கடுமையான காயங்களுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இரத்தினபுரியில் இருந்து இறக்குவானை நோக்கி நேற்று முன்தினம் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றின் மிதி பலகையில் இருந்து வீசப்பட்டே இவர் மரணித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். பெல்மதுளை சிங்கப்புலிவத்த என்ற இடத்தைச் சேர்ந்த 60 வயதான இக்குடும்பஸ்தர் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமடைந்துள்ளார்.

இதேவேளை, மற்றுமொரு விபத்தில் 10 வயதான சிறுவன் ஒருவனின் கால்கள் இரண்டின் மீது பஸ்ஸின் சில்லுகள் ஏறியதால் அந்த மாணவன் கால்களை இழக்க வேண்டிய நிலையில் உள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

பலாங்கொடை - பின்னவல வீதியில் வேகபிடிய என்ற இடத்தில் சிசுசெரிய பஸ்ஸில் ஏற முற்பட்ட இச்சிறுவனும் சிறுவனின் தாயும் இவ்விபத்துக்கு முகம் கொடுத்துள்ளனர். இவர்கள் இருவரும் பஸ்ஸில் ஏற முற்பட்டபோது சாரதி பஸ்ஸை முன்னே செலுத்தியதால் சிறுவன் விழுந்து சிறுவனின் கால்களின் மேல் பஸ்ஸின் சில்லுகள் ஏறியதால் கால்கள் இரண்டும் சிதைவடைந்த நிலையில் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பஸ் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# விவசாய காணியிலிருந்து வயோதிபப் பெண் சடலமாக மீட்பு

ஆ.ரமேஸ். டி.சந்ரு

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பங்களாவத்தை பகுதியில் விவசாயக் காணியில் தொழிலுக்காகச் சென்ற 70 வயதான தாய் ஒருவர் நேற்றுமுன்தினம் (25) மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் நானுஓயா எடின்பரோ தோட்டத்தைச் சேர்ந்த வேலுசாமி காளியம்மா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தத் தாய் தனது நாளாந்த வாழ்வாதாரத்திற்காக பங்களாவத்தை பகுதியில் தனியார் ஒருவரின் விவசாயக் காணியில் நாட் சம்பளத்திற்கு களை பிடுங்கச் சென்றுள்ளார்.

இந்நிலையில், விவசாக் காணியில் பயிர்களுக்கிடையில் இருந்து அகற்றிய களைகளை வீசுவதற்குச் சென்றபோது சுமார் இருபது அடி உயரமான மண்மேட்டில் இருந்து கால் இடறி விழுந்துள்ளார்.

இவ்வாறு வீழ்ந்துள்ள இவரின் தலை பிரதான வீதியின் கொங்கிரீட் கல்லில் அடிபட்டு பலத்த காயங்களுக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவரது சடலம் நுவரெலியா மாவட்ட நீதவானின் மரண விசாரணையைத் தொடர்ந்து பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்வி கற்போருக்கு வாசிப்பு பழக்கம் அத்தியாவசியம்

## நூலாசிரியர் நஜிமுதீன் கருத்து



உக்குவளை செய்தியாளர்

கல்வி கற்போர் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்வது அவசியமென்று மாத்தளை தவ்வா அமைப்பாளரும் முன்னாள் ஆசிரியரும் ஆய்வு நூலாசிரியருமான ஏ.எஸ்.நஜிமுதீன் கருத்து வெளியிட்டார்.

உக்குவளை மாருகொன வாசிப்போர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 'வானொலி திறமைக்கோர் களம்' எனும் நிகழ்ச்சியில் பார்வையாளராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முக்கிய பிரமுகர்கள் பலருடன் கண்டி வானொலி முஸ்லிம் சேவை அறிவிப்பாளர் எம்.முனாஸுடன் செய்தி ஆசிரியர் சதீஸ் கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் சமுகமளித்திருந்த இந்நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

கல்விக்கு அடிப்படையானது வாசிப்பு என்றே கூறலாம். மாணவர்கள் கற்கின்றனர். எனினும், போதிய வாசிப்புப் பழக்கமில்லை. வாசிக்காததன் காரணமாக பொது அறிவு உட்பட பல விடயங்கள் அவர்களுக்குத் தெரிவதில்லை. இது ஆரோக்கியமானதல்ல. 'கண்டதும் கற்றவன் பண்டிதன் ஆவான்' என்ற ஒரு முதுமொழியை படித்திருக்கிறோம். அதுமட்டுமன்றி, வாசிப்பை ஊக்குவிக்குமுகமாக பல முதுமொழிகளைக்கூட



படித்திருக்கிறோம். வாசிப்புக்கான பயனுள்ள பல்வேறு நூல்களுமுள்ளன. எனவே, மாணவர்கள் இவற்றின் மூலம் உச்ச பயன்பெறத் தவறக்கூடாது. ஓய்வு நேரங்களில் பயனுள்ள நூல்கள் சஞ்சிகைகள் பத்திரிகைகளை வாசிக்கலாம்.

நான் வாசித்ததன்பயனாகத்தான் என்னால் ஏழு வகை ஆய்வு நூல்களை எழுதமுடிந்தது. கல்வி கற்போர் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்வது அவசியம் - இன்றியமையாததொன்று - என்றார்.

# போதைப்பொருளை ஒழிக்குமாறு தொலுவ பகுதியில் கவனயீர்ப்பு!

கலஹா செய்தியாளர்

கம்பளை, பேராதனை, கெலிஓயா, நாவலப்பிட்டி, கலஹா, தெல்தொட்டை உட்பட மலையக தோட்டப்புறங்களுக்கு ஹெரோயின், ஐஸ், கஞ்சா உட்பட போதைப் பொருட்களை விநியோகிக்கும் மத்தியஸ்தானமாக இருக்கும் தொலுவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்ஓய பிரதேசத்தை அதிகாரிகள் காப்பாற்றித்தர முன்வருமாறு வலியுறுத்தி பிரதேசவாசிகள் உட்பட சமயத்தலைவர்களும் வீதியில் ஒன்று கூடி நேற்றுமுன்தினம் (25) கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீண்டகாலமாக போதைப்பொருள் விற்பனை இடம் பெற்று வருகின்றபோதும் மேற்படி பிரதேசத்திற்குப் பொறுப்பான பேராதனை பொலிஸாரோ அல்லது இப்பிரதேசத்துடன் தொடர்புடைய கம்பளை, கண்டி பொலிஸாரோ அல்லது போதைப்பொருளுடன் தொடர்புடைய எந்த ஒரு தரப்பினரும் இது வரையில் இப்பிரதேசத்தில் எந்த ஒரு சோதனை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லையென பிரதேசவாசிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள இளைஞர்கள் பலர் போதைப் பொருட்களுக்கு அடிமையாகியதால் களவு வழிப்பறிக் கொள்ளைகளும் தொடர்ந்து இடம் பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பௌத்த விகாரையில் பொருட்கள் களவாடல்

## சந்தேகத்தில் பிக்கு கைது

கண்டி செய்தியாளர்

கட்டுகஸ்தோட்டைப் பிரதேசத்தில் உள்ள பௌத்த விகாரை ஒன்றிலிருந்து சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாகவும் சந்தேகத்தில் அதே விகாரையில் தங்கியுள்ள பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுகஸ்தோட்டை பிரிவேனா விகாரை ஒன்றின் பிரதம குருவான அம்மன்கொட சுமங்கள தேரர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்படி பிக்கு கைதாகியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் பித்தளையால் செய்யப்பட்ட பல்வேறு பொருட்கள், வெள்ளை இரும்பினால் செய்யப்பட்ட பாத்திரங்கள், பிரிவெனாவில் பயன்படுத்தப்படும் ஒலி பெருக்கிக் கருவி, காவி உடைத் தொகுதி உட்படப் பல பொருட்கள் காணமற்போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதன்படி விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கட்டுகஸ்தோட்டை பிரதேத்தில் உள்ள பூஜைப் பொருட்கள் விற்கும் வர்த்தக நிலையத்தில் சில பொருட்களையும் மற்றும் ஒரு தொகுதி பொருட்களை சந்தேகத்தில் கைதாகியுள்ள உதவி மதகுருவின் உறவினர் வீட்டிலிருந்தும் மீட்டுள்ளனர்.

இதேவேளை, சந்தேகத்தில் கைதான மத குரு தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# நீரில் மூழ்கிய மாணவன் மரணம்

கண்டி செய்தியாளர்

லக்கலை பிரதேசத்தில் குளம் ஒன்றில் குளித்துக் கொண்டிருந்த மாணவர்கள் சிலரில் ஒருவர் நீரில் மூழ்கி நேற்று (26) மரணித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் மாதம்பை பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயது மாணவர் ஒருவரே உயிரிழந்துள்ளார். மாதம்பை பிரதேச தனியார் வகுப்பு மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட சுற்றுலா ஒன்றின் போது அவர்கள் இப்பிரதேச்ததிற்கு சென்று பின்னர் குளத்தில் நீராடும் போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

அங்கு 10 பேர் நீராடிக் கொண்டிருந்த போதே அதில் ஒருவர் நீரில் மூழ்கியுள்ளார். மேலும், தம்புள்ளை வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளதாகவும் லக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

# நுவரெலியாவில் புதிய சமுர்த்திப் பயனாளிகள் தெரிவில் பாரிய முறைகேடு

## பிரதேச செயலகம் முன் மக்கள் திரண்டு போராட்டம்

செ.திவாகரன், டி.சந்ரு

அரசாங்கத்தின் "அஸ்வெசும" நலன்புரித் திட்டம் மற்றும் புதிய சமுர்த்திப் பயனாளிகள் தெரிவு என்பவற்றில் பாரிய முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்து நுவரெலியாவில் பாதிக்கப்பட்ட மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசாங்கத்தின் "அஸ்வெசும" நலன்புரித் திட்டம் மற்றும் சமுர்த்தித் திட்டம் என்பவற்றுக்கு புதிதாக உள்ளீர்க்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் நுவரெலியா பிரதேச செயலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில், குறித்த பெயர்ப்பட்டியலில் உள்ளீர்க்கப் படாதவர்கள் ஒன்றிணைந்து நேற்று ( 26 ) திங்கட்கிழமை நுவரெலியாவில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பலத்த மழைக்கு மத்தியில் நுவரெலியா பிரதேச செயலகத்துக்கு முன்னால் ஒன்று கூடியமக்கள் அங்கிருந்து பேரணியாக நுவரெலியா எலிசபெத் மகாராணி வீதி, லோசன் வீதி வழியாக நுவரெலியா பிரதான தபாலகம் வரை சென்றுதபாலகத்துக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இதன்போது பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியவாறு கோஷமெழுப்பினர்.

சுமார் இரண்டு மணித்தியாலம் வரை போராட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.








# வன்முறைக் கும்பலை சேர்ந்த ஐவர் கைது!



வன்முறைக் கும்பலைச் சேர்ந்த ஐந்து பேர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.நகரில் கைது செய்யப்பட்டதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர். யாழ்.நகர்ப் பகுதிக்கருகில் இரண்டு வன்முறைக் கும்பல்களைச் சேர்ந்தவர்கள் மோதிக்கொள்ளத் தயாராக இருந்த நிலையில், யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந்துள்ளனர். பொலிஸாரைக் கண்டதும் மோதலுக்குத் தயாராக இருந்தவர்கள் தப்பியோடியுள்ளனர். அவர்களை துரத்திச் சென்ற பொலிஸார் ஐவரைக் கைது செய்துள்ளனர். மற்றையவர்கள் தப்பியோடியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கூரிய ஆயுதங்களை பொலிஸார் மீட்டுள்ளதுடன் தப்பியோடிய ஏனையவர்களையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.




வீட்டுக்கருகில் குப்பை கொட்டுபவர்கள் விபத்தில் சிக்கக் கூடியவாறு சூனியம் வைத்துள்ளதாக வீடொன்றின் முன்னால் ஒரு பொம்மை ஒன்றையும் யந்திர தகடொன்றையும் ஒருவர் தனது வீட்டு வேலியில் கட்டி காட்சிப்படுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு காட்சிப் படுத்தியிருந்தார்.

குறித்த நபரின் வீட்டு வீதியோரமாகப் பலரும் குப்பைகளை வீசிச் செல்கின்றனர். அதனால் தினமும் பல அசௌகரியங்களுக்கு அவர் முகம் கொடுத்து வந்தார்.

அதனால் பொறுமையிழந்த அவர், பொம்மை ஒன்றையும் யந்திர தகடொன்றையும் தனது வீட்டு வேலியில் கட்டி, " சூனியம் வைக்கப்பட்டுள்ளது. வாகன விபத்து நிச்சயம் ஏற்படும். தயவு செய்து வீதிகளில் குப்பை போட வேண்டாம்" என வாசகம் ஒன்றை எழுதி காட்சிப்படுத்தியுள்ளார்.

அதன் பின்னர் அப்பகுதியில் எவரும் குப்பைகளை வீசிச் செல்வதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# தேசிய ரீதியில் அல்-குர்ஆன் மனனப் போட்டி

எம்.எஸ்.எம்.ஸாகிர்

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியன இணைந்து இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவராலயத்தின் அனுசரணையில் தேசிய ரீதியில் அல்-குர்ஆன் மனனப் போட்டியொன்றை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளன.

இதற்கிணங்க எதிர்வரும் ஜூலை15 ஆம் திகதி கொழும்பில் இப்போட்டிகளை நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்போட்டிகள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளை மையப்படுத்தி நடத்தப்படவுள்ளன. நான்கு பிரிவுகளாக ஆண், பெண் இரு பாலாருக்கும் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக திணைக்கள உத்தியோகத்தர்களினால் வட்ஸ்அப் மூலமாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு அறிவித்தல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் 05 வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவதுடன் சவூதி அரேபிய தூதரகத்தின் மூலமாக அவர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

# "இந்திய முட்டைகளை விற்கத் தடை"

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு பேக்கரிகளுக்கு வழங்கப்படும் முட்டைகளை பிவெளியில் விற்பனை செய்யக்கூடாதென அரச வர்த்தக மற்றும் சட்டபூர்வ நிறுவனங்களின் தலைவர் ஆசிரி வாலிசுந்தர தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூரில் முட்டை விலையை குறைப்பதற்கும் முட்டை தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்குமென இந்தியாவிலிருந்து தினமும் பத்து இலட்சம் முட்டைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் பேக்கரிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இந்நிலையில், சில பேக்கரி உரிமையாளர்கள் அவற்றை கடைகளுக்கு விற்பனை செய்வதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. பேக்கரிகளுக்கு வழங்கப்படும் முட்டைகளை பிற கடைகளுக்கு விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இதனையும் மீறி கடைகளுக்கு முட்டை விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் குறித்த பேக்கரிகளுக்கான முட்டை விநியோகம் உடனடியாக நிறுத்தப்படும்.









அருஷாய் எக்கடமியின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் அதன் ஸ்தாபகர் இராஜசேகரன் அருஞ்சனாவின் தலைமையில் அவிசாவளை நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (25) இடம்பெற்றது. இவ்விழாவில் கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். (படப்பிடிப்பு: அவிசாவளை செய்தியாளர்)

# ஜாமிய்யா நளீமிய்யாவின் பொன்விழாவும் பட்டமளிப்பும்












அஷ்ரப் ஏ. சமட்

ஜாமிய்யா நளீமிய்யாவின் பொன் விழாவும் பட்டமளிப்பு நிகழ்வும் 24ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கலாபீடத்தின் தலைவர் யாக்கூத் நளீம் தலைமையில் இடம்பெற்றது.

முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.சி.அகார் முஹம்மத் மற்றும் இஸ்லாமிய கற்கை நெறியின் தலைவர் அஷ்ஷெய்க் பளீல் ஆகியோரின் வழிநடத்தலில் இடம்பெற்ற இவ்விழாவின் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக வேந்தரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பாயிஸ் முஸ்தபா, கௌரவ அதிதிகளாக அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ரஞ்ஜித் பண்டார, ரவூப் ஹக்கீம், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்,இம்ரான் மஹ்றூப், ஏ.எச்.எம்.பௌஸி, வயம்ப பல்கலைக்கழக பேராசிரியர் கே.டி.ரேணுக சில்வா, சர்வமதத் தலைவர்கள், ராஜதந்திரிகள், மர்ஹூம் நளீம் ஹாஜியாரின் குடும்ப உறுப்பினர்கள், நளீமிய்யாவின் பழைய மாணவர்கள், அரச அதிகாரிகள், நலன் விரும்பிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் ஜாமிய்யா நளீமிய்யாவின் தலைவர் யாக்கூத் நளீம் தலைமையுரையையும் முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.சி.அகார் முஹம்மத் வரவேற்புரையையும் பேராசிரியர் கே.டி.ரேணுக சில்வா சிறப்புரையையும் பாராளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாக்கீர்மாக்கார், ரவூப் ஹக்கீம் ஆகியோர் விசேட உரைகளையும் நிகழ்த்தினர்.

இதன்போது ஜாமிய்யா நளீமிய்யாவின் பொன்விழா மலர் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் இணையத்தளமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கலாபீடத்தில் கற்கை நெறியை முடித்துக்கொண்ட சுமார் 240 மாணவர்களுக்கு இதன்போது பட்டங்களும் வழங்கப்பட்டன.

# விமான உதிரிப்பாகங்கள் மேற்பரப்பு சுத்திகரிப்பு மையம் திறந்துவைப்பு





பாலாவி இலங்கை விமானப்படைத் தளத்தில் புதிதாக நிறுவப்பட்ட விமான உதிரிப்பாகங்கள் மேற்பரப்பு சுத்திகரிப்பு மையம் 2023 ஜூன் 20 ஆம் திகதி விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன் பத்திரனவினால் திறந்து வைக்கப்பட்டது.

விமானப்படையின் பொறியியல் திறன்களை மேம்படுத்துவதில் இது ஒரு தனித்துவமான மைல்கல்லைக் குறிக்கிறது.

இதன்மூலம் F-7 மற்றும் K-8 விமானங்களை மாற்றியமைக்கும் செயற்பாட்டின்போது உதிரிப் பாகங்களின் மேற்பரப்பு சுத்திகரிப்பை எளிதாக்குவதற்கு முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தப் பணிமனையின் வடிவமைப்பை சீனா ஏவியேஷன் டெக்னொலஜி இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தின் நிபுணர்கள் குழு மேற்கொண்டதுடன் பழுதுபார்ப்பு மற்றும் உபகரணங்கள் நிறுவுதல் ஆகியவை அவர்களின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த மேற்பரப்பு சுத்திகரிப்பு மையம் பரிந்துரைக்கப்பட்ட தரநிலைகளின்படி பரந்த அளவிலான மேற்பரப்பு பூச்சுகளைக் கொண்டுள்ளதோடு மின் முலாம்,பிரகாசமான பூச்சுகள் பல்வேறு வகையான மேற்பரப்பு முறைகள் என்பன சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த அதிநவீன இயந்திரங்களின் வெற்றிகரமான செயற்பாடு விமானப்படையின் பொறியியல் திறன்களை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், சகோதர சேவைகள் மற்றும் வெளி நிறுவனங்களுக்கு மதிப்புமிக்க சொத்தாக செயற்படுகிறது.துறைமுக அதிகாரசபை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் பிற சம்பந்தப்பட்ட அமைப்புகள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்த வசதிகளை விரிவுபடுத்த முடியும்.



இந்நிகழ்வில் விமானப்படைத் தளபதி , பிரதித் தளபதி, பணிப்பாளர்கள், கட்டுநாயக்க விமானப்படைத் தள விமானப் பராமரிப்புப் பிரிவின் கட்டளை அதிகாரி, சீன தேசிய விமான தொழில்நுட்ப இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பிரதிநிதிகள் குழுவினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (26.06.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 199.2038 | 212.2735 |
| கனேடியன் டொலர் | 226.0924 | 240.6133 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40.9334 | 44.1868 |
| யூரோ | 325.9044 | 344.7178 |
| ஜப்பான் யென் | 2.0833 | 2.2030 |
| சிங்கப்பூர் டொலர் | 220.7124 | 234.1875 |
| ஸ்ரேலிங் பவுன் | 380.7456 | 401.9660 |
| சுவிஸ் பிரான்ங் | 332.0533 | 353.8785 |
| ஐ.அ. டொலர் | 299.8333 | 314.9261 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 814.3452 |
| குவைட் | குவைட் தினார் | 998.5363 |
| ஓமான் | ஓமான் றியால் | 797.4337 |
| கட்டார் | கட்டார் றியால் | 84.2689 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 81.8427 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 83.5852 |



புனித ஹஜ் பெருநாளை முன்னிட்டு தோப்பூர் ஜாமியுல் ஹிக்மா பாலர் பாடசாலையில் முன்பள்ளிச் சிறார்களுக்கான ஹஜ் கடமையை எவ்வாறு நிறைவேற்றுவதென்பது தொடர்பான அறிமுக நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை(25) பாலர் பாடசாலை ஆசிரியர்களின் வழிகாட்டலில் நடைபெற்றது. இதன்போது மாதிரி கஃபா உருவாக்கப்பட்டு முன்பள்ளி சிறார்கள் அதை வலம்வரும் முறை தொடர்பாக மாதிரி ஹஜ் பயிற்றுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிகழ்வில் உலமாக்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வை ஏற்பாடு செய்த பாலர் பாடசாலை நிர்வாகத்துக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்கள் நன்றி தெரிவித்தனர். (தோப்பூர்)

# குருக்கள்மடம் ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி ஆலய கும்பாபிஷேகம் ஆரம்பம்

மட்டக்களப்பு குருக்கள்மடம் ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் 24ஆம் திகதி சனிக்கிழமை கிரியைகள் ஆரம்பமாகி, 26ஆம் திகதி எண்ணெய்க்காப்பு இடம்பெற்றதுடன் இன்று 27ஆம் திகதியும் எண்ணெய்க்காப்பு இடம்பெறவுள்ளது.

நாளை 28 ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து மண்டலாபிஷேகம் இடம்பெற்று பூஜைகள் இடம்பெறும்.

எதிர்வரும் ஜூலை 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சங்காபிஷேகம் இடம்பெற்று திருவிழா இனிதே நிறைவுறும். சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்தக் குருக்கள் (கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம்), சிவப்பிரம்மஸ்ரீ சரவண காசிபதிஸ்வரக் குருக்கள் (கணபதிஸ்வர குருகுலம், கண்டி) ஆகியோர் தலைமையில் பிரதிஸ்டா கால கிரியை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# விழிப்புலனற்றோருக்கு திருமணம் செய்துவைத்த சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையம்

கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் முற்று முழுவதுமாக விழிப்புலனற்ற இருவருக்கு திருமணத்தை நடத்தி சமூக மேம்பாட்டுக்கான முன்னுதாரணச் செயற்பாடொன்றை மேற்கொண்டனர்.

ஆரையம்பதியைச் சேர்ந்த பொன்னம்பலம் சுஜிதரன் மற்றும் திருக்கோவிலைச் சேர்ந்த சண்முகம்பிள்ளை சசிவதனி ஆகிய இருவருக்குமே திருமணத்தை நிகழ்த்தி வைத்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை (25) காலை 9.00 மணி தொடக்கம் 10.30 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் மண்முனைப்பற்று - ஆரையம்பதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற இத்திருமண நிகழ்வில், மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம், மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் தலைவர் பாவலர் சாந்தி முகைதீன் உள்ளிட்ட சங்க உறுப்பினர்கள் மற்றும் உதயம் விழிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்கள், திருமணத் தம்பதியினரின் குடும்ப உறவினர்கள் என பெருமளவிலானோர் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதித்ததோடு, அன்பளிப்புகளையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இதன்போது ஆரையூர் கலைஞர் கலாவிபூசணம் எஸ்.ரகுதாஸ் தலைமையிலான கலைஞர் குழுவினர் மணமக்களை வாழ்த்தும் வண்ணம் பாடல்களைப் பாடி அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியதுடன், இவ்வாறான விழிப்புலனற்றோராக இருக்கும் விசேட தேவையுடையவர்களைத் தேடி திருமணம் முடித்து வைப்பதன் ஊடாக எந்தவொரு மனிதரும் வாழ்க்கையில் தனிமையானவர்கள் அல்ல என்பதை உலகுக்கு உணர்த்தும் வண்ணமே இவ்வாறானவர்களைத் தேடி திருமணம் முடித்து வைப்பதாக மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் செயலாளரும் ஓய்வுபெற்ற பொறியியலாளருமான துரைராஜா லெட்சுமிகாந்தன் இதன்போது தெரிவித்தார்.



சட்டக் கல்லூரிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவனை கௌரவிக்கும் நிகழ்வு வாழைச்சேனை - நாவலடி அந்நூர் அகடமியின் ஏற்பாட்டில் அகடமியின் நிர்வாகத் தலைவர் அல்ஹாஜ் எம்.எல்.எம்.ரபீக் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (25) இடம்பெற்றது. அந்நூர் அகடமியில் கல்வி கற்று மௌலவி பட்டம் பெற்ற எம்.எப்.எம்.பாஜித் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்ட இளங்கலைமாணி பட்டப்படிப்புக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதையடுத்து அவரைப் பாராட்டி நினைவுப் பரிசு மற்றும் பணப்பரிசு வழங்கி கௌரவித்தனர். இதன்போது அதிதிகளாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் அஷ்-ஷெய்க் ஏ.எல்.பீர் முகம்மட் காஸிமி, அந்நூர் அகடமியின் அதிபர் அஷ்-ஷெய்க் ஏ.ஹபீப் காஸிமி, ஆசிரியர்கள், நிர்வாகிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (மீராவோடை செய்தியாளர்)






ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களை ஆற்றுப்படுத்த அமைக்கப்பட்ட கல்முனை இஸ்ஸாமாபாத் வீடமைப்புத் தொகுதியின் சிறுவர் விளையாட்டரங்கு கவனிப்பாரற்ற நிலையில் புற்கள் வளர்ந்தும் இணைக்கப்பட்ட கம்பிகள் உடைந்தும் ஊர்வனங்களின் உறைவிடமாகக் காட்சியளிக்கிறது. முழுநேரமும் மாணவர் கற்றலில் ஈடுபடுவதை கல்வியியலாளர்கள் வெறுக்கின்றனர். மாணவர்களின் உடல், உள மனவெழுச்சிகள் மேம்பட மாலைநேர விளையாட்டரங்கு அவசியமாகும். இச்சிறுவர் விளையாட்டரங்கை திருத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (நற்பிட்டிமுனை செய்தியாளர்)

# சேனைக்குடியிருப்பு கணேச மகா வித்தியாலயத்தில் மாணவர் மன்றம்

பாண்டிருப்பு செய்தியாளர்

கல்முனை வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் சிறந்த கல்விச் செயற்பாடுகள் மற்றும் மாணவர்களின் திறமைகளையும் ஆற்றல்களையும் வெளிக்கொணரும் வகையில் வலயக் கல்விப் பணிப்பாளரின் வழிகாட்டலில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய, சேனைக்குடியிருப்பு கணேச மகா வித்தியாலய அதிபர் பி.கமலநாதன் தலைமையில் மாணவர் மன்றம் நடைபெற்றது. மாணவர்களின் ஆளுமைகளை விருத்தி செய்யும் வகையிலும் இணைப்பாடவிதான கல்வியை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலும் இம்மாணவர் மன்றச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக அதிபர் தெரிவித்தார்.



இதில் பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். இதன்போது நடனம், நாடகம், கவிதை போன்ற பல்வேறு ஆற்றுகைகளும் இடம்பெற்றன.

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்க பொதுக்கூட்டம்

மாளிகைக்காடு செய்தியாளர்

இலங்கையின் புகழ்பெற்ற பாடசாலைகளில் ஒன்றான கல்முனை கல்வி வலய கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) பழைய மாணவிகள் சங்கத்துக்கான வருடாந்த பொதுக்கூட்டம் பாடசாலை சேர் ராசிக் பரீட் மண்டபத்தில் கல்லூரி அதிபர் யூ.எல்.அமீன் தலைமையில் இடம்பெற்றது.

கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியும் கல்முனை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான ஏ.பி.எப்.நஸ்மியா சனூஸ் உட்பட பழைய மாணவிகளின் பங்குபற்றலுடன் அண்மையில் இடம்பெற்ற வருடாந்த பொதுக்கூட்டத்தில் பாடசாலை கல்வி, பௌதீக அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகமும் தெரிவுசெய்யப்பட்டது.

அதில் பதவி வழியாக பாடசாலை முதல்வர் யூ.எல்.அமீன் தலைவராகவும் செயலாளராக கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினரும் கல்முனை சட்டத்தரணிகள் சங்க உப தலைவருமான சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா காரியப்பரும் பொருளாளராக விரிவுரையாளர் ஏ.பி.எஸ்.றிகானா ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும் உப தலைவராக ஷாமிலா ஜஹ்பர், உப செயலாளராக எம்.எம்.உம்மு ஹபீபா, உப பொருளாளராக ஏ.சி.பஸ்லுனா, கணக்காய்வாளராக எம்.எம்.சியாதா ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாக ஏ.எச்.சித்தி சபீனா, எம்.ஐ.சபானா, ஏ.எச். ஜெஷ்மின் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.



ஓட்டமாவடி தாருல் உலூம் வித்தியாலய மாணவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.எல்.எம்.பைசல் தலைமையில் அண்மையில்(23) இடம்பெற்றது. இதன்போது மாணவத் தலைவர்கள், வகுப்புத் தலைவர்கள், சுற்றாடல் கழக அங்கத்தவர்கள், சுகாதாரக் கழக அங்கத்தவர்கள் ஆகியோருக்கு சின்னம் சூட்டப்பட்டது. இந்நிகழ்வில், அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜே.தாஜுன்நிஸா, உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.பி.எம்.சித்தீக், ஆசிரிய ஆலோசகர் எச்.எம்.ஆதம் லெப்பை, ஓய்வுபெற்ற ஆசிரியர் எம்.எல்.எம்.முகாஜிரீன் ஆகியோர் கலந்து கொண்டனர். (மீராவோடை செய்தியாளர்)

# சம்மாந்துறையில் காணி உத்தரவுப் பத்திரம் வழங்கல்



திராய்க்கேணி செய்தியாளர்

சம்மாந்துறை பிரதேச 4ஆவது காணி உத்தரவு பத்திரம் மற்றும் அழைப்பு பத்திரம் வழங்கும் நிகழ்வு அன்மையில்(23) பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா தலைமையில் சம்மாந்துறை மஜீத் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் கலந்துகொண்டு 80 காணி உத்தரவு பத்திரம், அளிப்பு பத்திரங்களை வழங்கி வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எஸ்.எம். நவாஸ், வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.உமர் மௌலானா, மாவட்ட காணி தலைமைப்பீட உத்தியோகத்தர் கே.எம்.முஸம்மில், நில அளவை அத்தியட்சகர், விவசாய விரிவாக்கல் பொறுப்பதிகாரி(மல்வத்தை), சம்மாந்துறை பிரதேச சபை பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர், நம்பிக்கையாளர் சபை பிரதிநிதி, மஜ்லிஸ் அஸ்சூரா மற்றும் பள்ளிவாசல் நிர்வாக சபைகளின் பிரதிநிதிகள், வீரமுனை கோயில் தர்மகர்த்தா சபை பிரதிநிதி, சம்மாந்துறை வர்த்தக சங்கத் தலைவர், விவசாய அமைப்புகளின் பிரதிநிதி, சமூக அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கல்முனை லயன்ஸ் கழகத்தின் வெள்ளிவிழாவில் கௌரவிப்பு

எருவில் செய்தியாளர்

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் 25ஆவது வெள்ளிவிழா வருட (2023/2024) புதிய நிர்வாகிகளின் பதவியேற்பு நிகழ்வு கல்முனை கிறீன் பார்க்றிகோட் மண்டபத்தில் 25ஆம் திகதி மாலை நடைபெற்றது.

இக்கழகத்தின் 2023 / 2024 வெள்ளி விழா வருட புதிய நிர்வாக சபை பதவியேற்புக்கான இந்நிகழ்வில், தெரிவுசெய்யப்பட்டுள்ள இரண்டாவது உதவி மாவட்ட ஆளுநர் லயன் கயா உபசேன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருந்தார்.

கழகத்தின் புதிய நடப்பாண்டுக்கான தலைவராக லயன் பொறியியலாளர் எம்.சுதர்சனும் செயலாளராக லயன் ஏ.எல்.எம்.பாயிஸும் பொருளாளராக லயன் எம்.பரமேஸ்வரநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி மூ.கோபாலரெத்தினம், மூத்த ஊடகவியலாளர் கலாபூசணம் ஏ.எல்.எம். சலீம் ஆகியோர் ஆற்றிவரும் சேவைகளுக்காக பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.




# கிழக்கு பல்கலைக்கழக இளம் பட்டதாரி மாணவி உயிரிழப்பு

ஆலையடிவேம்பு செய்தியாளர்

அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளம் பட்டதாரி மாணவி ஒருவர் அதிகமான மாத்திரைகளை உட்கொண்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை(26) உயிரிழந்துள்ளார்.

தெய்வேந்திரன் டிலோஜினி எனும் கிழக்கு பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தனது தனிப்பட்ட காரணங்களுக்காக இம்மாணவி அதிகமான மாத்திரைகளை உட்கொண்டு ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் அக்கரைப்பற்று பிரதேசத்தில் மாத்திரமன்றி கல்விகற்ற சமூகத்தின் மத்தியிலும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், இளம் பராயத்தினரின் திடீர் முடிவுகளால் ஏற்படும் உயிரிழப்பைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தையும் சமூகத்தின் மத்தியில் உணர்த்தி நிற்கின்றது.

எது எவ்வாறாயினும், பெறுமதிமிக்க எதிர்காலத்தினர் இவ்வாறு தமது உயிரை மாய்க்கும் முன்னர் உங்கள் தாய், தந்தை, உறவுகளை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். பெற்றோரும் கல்விச் சமூகத்தினரும் நம் சந்ததிகளுக்கு வெறுமனே கல்வியை மட்டும் புகட்டாது வெற்றி - தோல்விகளை எதிர்கொள்ளும் மனநிலையையும் விதைத்து விடுங்கள். இல்லையேல், எமது சந்ததிகளின் வாழ்க்கை கேள்விக்குறியாக மாறிவிடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.



ஓய்வு பெற்றுச்செல்லும் அம்பாறை மாவட்ட அரச அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸுக்கான பிரியாவிடை நிகழ்வு அண்மையில்(24) இடம்பெற்றது. அம்பாறை மாவட்டத்தில் கடமையாற்றும் பிரதேச செயலாளர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் மேலதிக அரச அதிபர் வீ.ஜெகதீஸன் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிப்பதையும் கலந்து கொண்ட பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர்களையும் காணலாம். (மாவடிப்பள்ளி செய்தியாளர்)

## "அரசின் சமுர்த்தி நலத்திட்டம் ஏழைகளுக்கு இல்லையா?"

# சம்மாந்துறை பிரதேச செயலக பொதுமக்கள் கவனயீர்ப்பு

சம்மாந்துறை செய்தியாளர்



அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள அஸ்வெசும நலன்புரித் திட்டத்தினால் ஏற்கனவே சமுர்த்திக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொண்டிருந்த பலரும் நீக்கப்பட்டுள்ளமையை கண்டித்து சம்மாந்துறை பிரதேச செயலக வாசலில் ஒன்றுகூடிய பொதுமக்கள் குறித்த திட்டத்துக்கு



எதிர்ப்புத் தெரிவித்து திங்கட்கிழமை(26) கவனயீர்ப்பை மேற்கொண்டனர்.

இதன்போது பழைய முறைப்படி சமுர்த்திக் கொடுப்பனவுகளை வழங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

இவர்கள், மேற்படி திட்டத்தினால் புறக்கணிக்கப்பட்டவர்களின் முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளவும் அவர்களின் தரவுகளை மீளவும் பதிவுசெய்வதற்கு சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள 51 பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் நேற்றையதினம் பிரதேச செயலகத்தின் வாசலில் ஒன்றுகூடியிருந்தனர்.

இதன்போது இத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட தாயொருவர் கருத்து தெரிவிக்கையில், "நான் கணவனை இழந்து இரண்டு பிள்ளைகளுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். எனது சமுர்த்தியை வெட்டியுள்ளார்கள். எனக்கு இருப்பதற்கு வீடு கூட இல்லை. கூலி வீட்டிலேயே வாழ்கின்றேன். இங்கே வந்தால் வீட்டுக்கு போங்கள் என்று சொல்லுகிறார்கள். ஐந்து பேருக்கு கொடுத்து 10 பேரை இல்லாமல் செய்யும் இந்த அரசாங்கம் எதற்கு உள்ளதென்றே தெரியவில்லை - என்றார்.

மேலும், இல்லாத ஏழைகளின் சமுர்த்தியை வெட்டி வசதிபடைத்தவர்களுக்கு கொடுத்துள்ளார்கள். இது நியாயமான விடயமே கிடையாது. இவ்வாறான திட்டங்களை ஏழைகளுக்கே வழங்க வேண்டும். இதை சமுர்த்தி உத்தியோகத்தர் நிவர்த்தி செய்ய வேண்டும்.

எனக்கு இருப்பதற்கு வீடில்லை. ஆனால், எனக்கு 03 மாடி கட்டிடம் இருப்பதாக போட்டுள்ளார்கள். மின்சாரமில்லை. 154 யுனிட் பாவித்துள்ளதாகக் காட்டியுள்ளார்கள். எனது வருமானம் 15 ஆயிரம் ரூபா. 1,50,000 ரூபா வருமானம் காட்டியுள்ளார்கள். இதனை எங்குசொல்வதென்றே தெரியவில்லை. இதனால் ஏழைகளின் வயிற்றில் அடிக்காமல் அரசின் நலத்திட்டங்களை ஏழைகளுக்கு வழங்கி எம்மையும் உயர்த்திவிடுங்கள்"- என விநயமாகக் கேட்டுக்கொண்டார்.

# மட்டக்களப்பில் உப உணவுத் திட்டம் முன்னெடுப்பு

மட்டக்களப்பு செய்தியாளர்

விவசாய அமைச்சினால் பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் முகமாக அரசாங்கத்தினால் உப உணவுத் திட்டத்தின் கீழ் தொடர்ச்சியான வேலைத்திட்டங்கள் தற்போது மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்தகால பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் முகமாக தொடர்ச்சியான வேலைத்திட்டங்கள் தற்போது பிரதேச செயலகங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிரான்குளம் பகுதியில் விவசாய அமைச்சினால் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை அதிகரிக்கும் நோக்குடன் தானிய பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் முகமாக உளுந்து உள்ளீடுகள் 17 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

இந்த விவசாய நடவடிக்கையானது தற்போது கிரான்குளம் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கிரான்குளம் கமநல அமைப்பின் தலைவர் எஸ்.சசிகுமாரது தோட்டத்தில் அரை ஏக்கர் காணியில் இந்த தானியப் பயிர்களான உளுந்து மற்றும் பயறு பயிர்ச்செய்கையை முன்னெடுத்து வருகின்றார்.

உப உணவுத் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டுக்குட்பட்ட விவசாயிகளுக்கு கிடைக்கப் பெற்றதாகவும் இந்த தானிய பயிர்ச்செய்கை மூலம் கூடிய இலாபம் கிடைப்பதாகவும் இவ்வாறாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த உதவிகள் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சந்திரகாந்தனின் பணிப்பின்பேரில் மண்முனைபற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிரான்குளம் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் இத்திட்டத்தில் தானிய விவசாயம் செய்யும் விவசாயிகளின் முன்னேற்ற கள ஆய்வு விஜயத்தை பிரதேச செயலாளர் திருமதி எஸ்.சத்யாநந்தினி மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் இராஜாங்க அமைச்சரின் பிரதிநிதியாக செயலாளர் பூ. பிரசாந்தன் மற்றும் விவசாயத் திணைக்கள பிரதிநிதிகள் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நலன்புரித் திட்டத்தில் தகுதியுடையோரின் பெயர் நீக்கப்பட்டுள்ளதை கண்டித்து மூதூரில் போராட்டம்

மூதூர் செய்தியாளர்

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் அரசாங்கத்தின் நலன்புரி உதவித் திட்டத்தில் தகுதி இருந்தும் தெரிவுசெய்யப்படாது பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மூதூர் பிரதேச செயலகத்துக்கு முன்பாக திங்கட்கிழமை(26) காலை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் "யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றோம். விதவைகளாக இருக்கின்றோம். அன்றாட கூலி வேலை செய்து சாப்பிடுவதற்கு கூட கஷ்டப்பட்டு வாழ்கின்றோம். இந்நிலையில், தற்போது மின்சாரக் கட்டணம் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு உள்ளிட்டவற்றால் கஷ்டப்படும் எமக்கு அரசாங்கமும் அதிகாரிகளும் தீங்கிழைத்துள்ளனர் என ஆவேசத்துடனும் கவலையுடனும் கருத்து தெரிவித்தனர்.



அத்தோடு, தகுதியானவர்களின் பெயர்கள் உதவித் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. தகுதியற்றவர்களின் பெயர்களே இடம்பெற்றுள்ளன. சமுர்த்தி வங்கியில் உள்ள பொதுமக்களின் பணம் சூறையாடப்பட்டு ஊழல் இடம்பெற்றுள்ளது -என்றார்.

சுமார் அரை மணி நேரம் பிரதேச செயலக வளாகத்தில் அமைதியின்மை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பின்னர் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாறக் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களைச் சந்தித்து பேசியதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்களின் பெயர்களை மீள் பரிசீலனை செய்வதாகவும், அதற்காக உத்தியோகத்தர்களை நியமித்து நடவடிக்கை எடுப்பதாகவும் வாக்குறுதி வழங்கியதையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கலைந்து சென்றனர்.

# தேங்காய் தலையில் விழுந்ததில் குடும்பப்பெண் உயிரிழப்பு

மண்டூர் செய்தியாளர்

மத்தியமுகாம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விஜயபுர சடயன்தலாவையில் தலையில் தேங்காய் விழுந்ததில் குடும்பப்பெண்ணொருவர் உயிரிழந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை(25) இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விஜயபுர சடயன்தலாவ பிரதேசத்தைச் சேர்ந்த 62வயதுடைய இரு பிள்ளைகளின் தாயாரான மாஹேனே கெதர வண்டார மெனிக்கே என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 12ஆம் திகதி தனது வீட்டிலுள்ள தென்னை மரத்தின் கீழாக நடந்து செல்லும் போது திடீரென தென்னை மரத்திலிருந்து தேங்காய் தலையில் விழுந்து மத்தியமுகாம் மற்றும் கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற பதில் நீதிவான் பி.பிறேமனாத் உத்தரவுக்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் பிரேதத்தை உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தும் படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை மத்தியமுகாம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள் eastthamilan@gmail.com

# முச்சக்கரவண்டி – ஜீப்வண்டி நேருக்கு நேர் மோதி விபத்து

தோப்பூர் செய்தியாளர்



திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதி பட்டித்திடல் மகா வித்தியாலயத்துக்கு முன்பாக முச்சக்கரவண்டியும் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான ஜீப் வண்டியும் நேருக்கு நேர் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

திங்கட்கிழமை(26) இடம்பெற்ற இவ்விபத்தில் முச்சக்கரவண்டிச் சாரதி பலத்த காயங்களுடன் மூதூர் தள வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கல்லாறு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் இருந்து ஊழியர்களை ஏற்றிக்கொண்டு திருகோணமலை பயணித்த ஜீப் வண்டியும் பட்டித்திடல் மகா வித்தியாலயத்துக்கு ஊழியரை ஏற்றிச் சென்று திரும்பிய முச்சக்கரவண்டியுமே இவ்வாறு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது.

இவ்விபத்தில் படுகாயமுற்ற முச்சக்கரவண்டிச் சாரதி பாலத்தோப்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயது மதிக்கத்தக்க மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். விபத்து தொடர்பாக மூதூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 'வறிய மக்களுக்கு அஸ்வெசும திட்டம் வழங்கப்பட வேண்டும்'

## ஓட்டமாவடி பொதுமக்கள் கவனயீர்ப்புப் போராட்டம்





மீராவோடை, கல்குடா செய்தியாளர்கள்

அரசாங்கத்தின் நலன்புரி நன்மைகள் சபை உதவிக் கொடுப்பனவு பட்டியலில் பெயர்கள் இணைத்துக் கொள்ளப்படாத பொதுமக்கள் திங்கட்கிழமை(26) கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி, மீராவோடை, பதுரியா நகர், மாஞ்சோலை, காவத்தமுனை பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களே இவ்வாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"வேண்டும் வேண்டும் நீதி வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும், ஏழை, எளிய - வறிய மக்களுக்கு அஸ்வெசும திட்டம் வழங்கப்பட வேண்டும், எடுக்க வேண்டும் எங்கள் கிராமத்தை கவனத்திலெடுக்க வேண்டும்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு ஆண்கள், பெண்கள் என பெருந்திரளான மக்கள் போராட்டம் செய்தனர்.

ஓட்டமாவடி மணிக்கூட்டுக்கோபுர சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட இக்கவனயீர்ப்புப் போராட்டம், பிரதேச செயலகம் வரை சென்று உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.எம்.அல் அமீன் மற்றும் திட்டப் பணிப்பாளர் எஸ்.ஏ. நியாஸ் ஆகியோரிடம் மகஜர் கையளிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக பெயர் வராதவர்கள் மேன்முறையீடு செய்வதற்கான வசதிகள் பிரதேச செயலகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மகஜரின் பிரதி, மாவட்ட செயலருக்கு அனுப்பப்படும் என்றும் தெரியப்படுத்தப்பட்டதையடுத்து பொதுமக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

## போடியார் புலம்பல்!



*தமிழ் கட்சி தலைவர்கள் அரசியல் புழைப்பு நடத்திறாங்களாம் எண்டு சிங்கள கட்சி அமைச்சர் பிரசன்ன சொல்லியிருக்கிறாரு எலுவா..? அடே தம்பி தமிழ்கட்சிகள அரசியல் புழைப்பு நடத்த விட்டதே உங்கட சிங்கள தலைவர்கள்தானேடா... தந்தை செல்வா காலத்தில தமிழர்களிட உரிமையை குடுத்திருந்தா ஒரு சோலியும் வந்திருக்காதே. உங்கட ஆளும் கட்சில எலும்புத்துண்ட நக்கிற சில தமிழ் அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மாருதான் மண்ண விக்கிறதும், குத்தக பணம் எடுத்தும் அரசியல் புழைப்பு நடத்திறாங்க.!*

# தேங்காய் பறித்துத் தருவதாகக் கூறி பாலியல் துஷ்பிரயோக முயற்சி

## முதியவர் கைது

பாறுக் ஷிஹான்

வீட்டின் வளவில் விளையாடிக்கொண்டிருந்த சிறுமியை ஏமாற்றி அழைத்துச் சென்று அங்க சேட்டை செய்த முதியவர் ஒருவரை கல்முனை தலைமையகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(25) மாலை இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதன்போது தனது வீட்டின் வளவில் விளையாடிக்கொண்டிருந்த 08 வயதான சிறுமியை அவ்வழியால் மாடு மேய்த்துக் கொண்டிருந்த 64 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் தேங்காய் பறித்து தருவதாக அழைத்துச் சென்று அச்சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்த முயற்சித்துள்ளதாக சிறுமியின் உறவினரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, சந்தேக நபரான முதியவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், நீதிமன்ற நடவடிக்கைக்காக கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் கல்முனை தலைமையக சிறுவர் பெண்கள் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

# பொதுமக்களை பொலிஸார் சித்திரவதைப்படுத்தாமல் அடிப்படை உரிமைகளை பாதுகாக்க வேண்டும்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவிப்பு

பாறுக் ஷிஹான்

குடும்பச் சுமைகளைச் சுமக்கின்ற தாய்மார்கள் வேலைக்குச் செல்லும்போது ஏற்படும் விபரீதங்கள் பற்றியும் சமூகத்தில் உள்ளவர்களின் வறுமை, கல்வியறிவின்மை போன்ற காரணங்களினாலும் நாளுக்கு நாள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில், புலனாய்வுகளின்போது சந்தேக நபர்களை சித்திரவதைக்குள்ளாக்காமலும் இழிவான நடத்துகைக்குள்ளாக்காமலும் அடிப்படை உரிமையை பாதுகாக்க வேண்டும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

சர்வதேச சித்திரவதைக்கு எதிரான தினத்தையொட்டி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் கல்முனை பிராந்தியத்திலுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கான செயலமர்வு கல்முனை பொலிஸ் தலைமையக நிலையத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையில் திங்கட்கிழமை(26) இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய நிலையத்துக்குட்பட்ட ஐந்து பொலிஸ் நிலையங்களிலுள்ள உயரதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். மேலும் இணைப்பாளர் அஸீஸ் தெரிவிக்கும்போது, 1994ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றுக்கு எதிரான சமவாய சட்டம் ஒன்றை இலங்கை அரசு உள்வாங்கி அதனை 20.12.1994 இல் அத்தாட்சிப்படுத்தியது.

சிறுவர் பாலியல் தொந்தரவுகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டாலும் அவைகளில் சில நீதிமன்றம் வரை கொண்டு செல்லப்படாமல் சமாதானப்படுத்தப்பட்டு வருகின்றமை கவலைக்குரியது. இதனால் தப்புச் செய்கின்றவர்கள் இலகுவில் தப்பித்துக் கொள்கின்றனர். இதற்கு சாட்சிகள் முன்வராமை சமூகத்தின் ஏளனமான பார்வை ஆதாரங்கள் அழிக்கப்படல் என்பவைகள் வழக்கொன்றை தொடர்வதற்கு பலமற்ற விடயங்களாக இருக்கின்றன. எம்மில் அநேகமானவர்களுக்கு பாலியல் தொந்தரவானது இலங்கைச் சட்டத்தில் குற்றம் என எழுதப்பட்டுள்ள விடயம் என்னவென்பது தெரியாது என்றே கூற வேண்டும். இது பற்றி



1995ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க தண்டனை சட்டக்கோவை சட்டத்தின்படி இக்குற்றம் பற்றி வறையறை செய்யப்பட்டுள்ளது.

சித்திரவதைகளைக் கட்டுப்படுத்த பாரிய பங்களிப்பைச் செய்கின்ற இடம்தான் நீதவான் நீதிமன்றம். இங்குதான் ஆரம்ப கட்டத்தில் அதிகமானோர் வருகின்றனர். அதில் சிறு தொகையினரே உயர் நீதிமன்றம் செல்கின்றனர்.

இலங்கை அரசியலமைப்பின் 03ஆம் அத்தியாயத்தில் 11ஆம் உறுப்புரையில் உடல் ரீதியாகவோ உள ரீதியாகவோ ஒரு மனிதனை சித்திரவதை செய்வது அடிப்படை உரிமை மீறல் எனவும் ஒருவரை தொல்லைக்கு உட்படுத்துவது துன்புறுத்தும் செயலாகவும் சட்டம் கருதுகிறது. ஒரு பிள்ளையை சொற்களின் மூலமாக அல்லது வேறொரு விதத்தில் பாலியல் இம்சைக்குள்ளாக்குதல் குற்றம் என்பதையும் வலியுறுத்திக் கூறியுள்ளது என்றார்.

இந்நிகழ்வில் சித்திரவதை பற்றிய மருத்துவ ரீதியான கருத்துகளை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி முஹம்மட் றிபாஸ் நிகழ்த்தினார்.

# எகிப்தில் 1,000 ஆண்டுகள் பழமையான மசூதியை பார்வையிட்ட பிரதமர் மோடி

எகிப்து தலைநகர் கெய்ரோவில் அமைந்துள்ள ஆயிரம் ஆண்டுகள் பழமையான மசூதியை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்றுமுன்தினம் பார்வையிட்டார்.

கடந்த 10, 11, 12ஆம் நூற்றாண்டுகளில் எகிப்து நாட்டை பாஃதிமித் மன்னர் பரம்பரை ஆட்சி செய்து வந்தது. இந்த மன்னர் பரம்பரையின் ஆட்சிக் காலத்தில் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எகிப்து தலைநகர் கெய்ரோவில் அல்-ஹக்கீம் மசூதி கட்டப்பட்டது.

போதிய பராமரிப்பின்றி இந்த மசூதி சிதிலமடைந்தது. கடந்த 1970ஆம் ஆண்டு இந்தியாவை சேர்ந்த போரா முஸ்லிம்கள், பெரும் பெருட்செலவில் மசூதியை புனரமைத்தனர். தற்போதுவரை இந்திய



போரா முஸ்லிம்கள் மசூதியை தங்களது சொந்த செலவில் பராமரித்து வருகின்றனர். கடந்த 03 மாதங்களுக்கு முன்பு மசூதி மீண்டும் புனரமைக்கப்பட்டது.

சமீபத்திய புள்ளிவிபரத்தின்படி, உலகம் முழுவதும் 100 நாடுகளில் சுமார் 50 இலட்சம் போரா முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இந்தியாவின் சூரத், மும்பை உள்ளிட்ட நகரங்களில் சுமார் 05 இலட்சம் போரா முஸ்லிம்கள் வசிக்கின்றனர்.

இவர்கள் எகிப்தை ஆண்ட பாஃதிமித் மன்னர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் ஆவர். இதன் காரணமாகவே, கெய்ரோவில் உள்ள அல்-ஹக்கீம் மசூதியை இந்திய போரா முஸ்லிம்கள் மீண்டும் கட்டியெழுப்பியுள்ளனர். அதன் கட்டுமான அழகை வியந்து பாராட்டினார் மோடி . மசூதியை புனரமைத்த இந்திய போரா முஸ்லிம்களிடம் பிரதமர் மோடி நட்புறவுடன் கலந்துரையாடினார். இந்த புகைப்படங்களை அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அத்தோடு, அவர் வெளியிட்டுள்ள பதிவில் ''எகிப்தின் பாரம்பரியம், கலாசாரத்தை அல்-ஹக்கீம் மசூதி பிரதிபலிக்கிறது'' என்று தெரிவித்துள்ளார்.

### நினைவிடத்தில் மரியாதை

முதலாம் உலகப்போரின்போது ஆங்கிலேய படை சார்பில் எகிப்து மற்றும் பாலஸ்தீனத்தில் முகாமிட்ட இந்திய வீரர்கள் துருக்கியின் ஒட்டமான் பேரரசு படைகளுக்கு எதிராகப் போரிட்டு வெற்றியைப் பெற்றுத் தந்தனர். இந்த போரின்போது சுமார் 4ஆயிரம் இந்திய வீரர்கள் உயிரிழந்தனர். அவர்களின் நினைவாக எகிப்தின் சூயஸ் கால்வாய் அருகில் போர்க் டெவ்பிக் பகுதியில் நினைவிடம் அமைக்கப்பட்டிருந்தது. கடந்த 1970இல் எகிப்து-இஸ்ரேல் இடையே நடைபெற்ற போரின்போது இந்த நினைவிடம் அழிக்கப்பட்டது.

# அமெரிக்காவைப் பழிவாங்குவோம்!

## வட கொரியாவில் இலட்சக்கணக்கானோர் திரண்டு சூளுரை



வடகொரியாவில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இலட்சக்கணக்கானோர் திரண்டு கொரிய போர் தொடங்கப்பட்டதன் 73ஆவது நினைவு நாளை அனுஷ்டித்தனர். அப்போது அமெரிக்காவை அழிக்க பழிவாங்கும் போர் நடத்துவோம் என்றும் அவர்கள் சூளுரைத்தனர்.

வட கொரிய அரசு ஊடகம் வெளியிட்ட செய்தியில் ஒரு இலட்சத்து 20ஆயிரம் மக்கள், மாணவர்கள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசு செய்தி நிறுவனம் வெளியிட்ட புகைப்படத்தில் மக்கள் தங்களின் கைகளில் அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்களுடன் கூடிய பதாகைகளை வைத்திருப்பதை ஆவணப்படுத்தியிருந்தது.

''ஒட்டுமொத்த அமெரிக்க நிலப்பரப்பும் எங்களின் துப்பாக்கிகளின் வீச்சுக்குள் இருக்கின்றது, எதேச்சதிகார அமெரிக்கா அமைதியை அழிக்கும் தேசம், அமெரிக்காவை அழிக்க பழிவாங்கும் போரை நடத்துவோம்'' போன்ற வாசகங்கள் கொண்ட பதாகைகளை மக்கள் வைத்திருந்தனர்.

வட கொரியா விரைவில் அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளை கண்காணிக்கும் வகையில் முதல் உளவு செயற்கைக்கோளை ஏவ உள்ளதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில் நேற்று இந்த எச்சரிக்கை வாசகங்களை அந்நாடு வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

மேலும், கே.என்.சி.ஏ.ஊடகம், ''அமெரிக்க ஏகாதிபத்தியர்களை அழிக்கும் வலிமையான ஆயுதங்கள் வட கொரியாவிடம் இருக்கின்றன. இந்த நாட்டைப் பாதுகாக்கத் துடிப்பவர்கள் எதிரியை பழிவாங்கும் நெருப்பை உள்ளத்தில் எரியவிட்டுக் கொண்டிருக்கின்றனர்'' என்று குறிப்பிட்டுள்ளது. வட கொரியாவின் போர் நினைவுப் பேரணியும் அதில் எடுத்துக் கொள்ளப்பட்ட சூளுரையும் சர்வதேச கவனம் பெற்றுள்ளன.

வட கொரியா அவ்வப்போது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள், அணு ஆயுதங்களை சோதனை செய்து வருகிறது. தங்களின் அண்டை நாடான தென் கொரியாவை ஆயுதக் களமாகவும் போர்க்களமாகவும் பயன்படுத்த அமெரிக்கா முயற்சிக்கிறது என்று வட கொரியா நீண்ட காலமாக குற்றஞ்சாட்டி வருகிறது. மேலும் தங்களின் பாதுகாப்புக்காகவே தாங்கள் ஆயுதச் சோதனைகளை செய்து வருவதாக வட கொரியா கூறிவருகிறது.

### வட கொரியா, தென் கொரியா மற்றும் அமெரிக்க பகையின் பின்னணி

ஒரே மொழி, ஒரே இனத்தைக் கொண்ட இரு கொரிய நாடுகளுக்கும் இடையே என்னதான் பிரச்சினை என்று வரலாற்றுப் பக்கங்களைத் தேடினால் இரண்டாம் உலகப் போரில் இருந்து கதை தொடங்குகிறது. அப்போது, ஒன்றுபட்ட கொரியாவை ஜப்பான் தனது காலனித்துவ ஆட்சியின் கீழ் வைத்திருந்தது. இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் சரணடைந்த பின்னர், 1945இல் கொரியா விடுதலை பெற்றது.

கொரியா விடுதலை பெற்ற வேளையில் அதன் வட பகுதியில் சோவியத் நாடும் தென் பகுதியில் அமெரிக்காவும் ஆதிக்கத்தைச் செலுத்தின. இரு ஆதிக்க நாடுகள் இடையிலான பனிப்போர், கொரியாவில் பெரும் சண்டையாக வெடித்தது. ஐந்தே ஆண்டுகளில் மீண்டும் போரை சந்தித்தது ஒன்றுபட்ட கொரியா. 1950இல் தொடங்கிய கொரியப் போர் மூன்று வருடங்கள் நீடித்தன.

1953இல் தற்காலிகப் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் தொடர்ச்சியாக வட கொரியா மற்றும் தென் கொரியா என இரண்டு நாடுகள் உருவாகின. போர் நிறுத்தத்தின்போது எந்த அமைதி ஒப்பந்தமும் ஏற்படவில்லை. அப்போதிலிருந்தே இரு நாடுகள் இடையே பிரச்சினைகள் தொடர்ந்து வருகின்றன. இன்றும் தென் கொரியாவில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

அங்கே அமெரிக்கப் படைகள் இருக்கின்றன. வட கொரியாவுக்கு அமெரிக்கா என்றாலே வெறுப்பு. அந்த வெறுப்பு தென் கொரியா மீதும் பாய்ந்து கொண்டிருக்கிறது. இதனை வெளிப்படுத்தும் விதமாக வட கொரியா போர் நினைவு நாளில் சூளுரைத்துள்ளது.

# குண்டு போட்டது மறந்து விட்டதா? ஒபாமாவிடம் கேட்கிறார் நிர்மலா



இந்தியாவில் முஸ்லிம்கள் நிலைமை தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடியுடன் பேசுவதாக, அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியுள்ளார். அவரது ஆட்சியின்போது, ஆறு முஸ்லிம் நாடுகள் மீது அமெரிக்கா குண்டுகள் வீசியதை அவர் நினைத்துப் பார்க்க வேண்டும் என, இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்காவுக்கு சமீபத்தில் பயணம் செய்தார்.

அப்போது, இந்தியாவில் முஸ்லிம்கள் நிலைமை குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, இந்தியாவில் மதம், ஜாதி அடிப்படையில் எந்தப் பாகுபாடும் கிடையாது. அனைவரும் சமமாக நடத்தப்படுகின்றனர் என, பிரதமர் மோடி பதிலளித்தார்.

இது குறித்து கருத்து தெரிவித்த அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா, இந்தியாவில் முஸ்லிம்கள் நிலைமை குறித்து பிரதமர் மோடியுடன் பேசுவேன் என குறிப்பிட்டார். இதை சுட்டிக் காட்டி, காங்கிரஸ் கட்சி விமர்சனம் செய்து வருகிறது.

இது குறித்து, பா.ஜ.க, மூத்த தலைவரும் மத்திய நிதியமைச்சருமான நிர்மலா சீதாராமன் நேற்றுமுன்தினம் கூறியுள்ளதாவது:

இல்லாத பிரச்சினையை, எந்தவித புள்ளி விபரங்களும் இல்லாமல் எதிர்க்கட்சிகள் அரசியல் நடத்துவதற்காக எழுப்பி வருகின்றன.

ஒரு சில மாநிலங்களில், ஒரு சில இடங்களில் உள்ள சட்டம், ஒழுங்கு பிரச்சினையை தேசியப் பிரச்சினையாக, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் பூதாகரமாக்குகின்றன. முஸ்லிம்களுக்கு எதிராக இந்த நாட்டில் பிரச்சினை உள்ளதாக பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றனர். இதற்கு எந்த புள்ளி விபரங்களையோ, ஆதாரங்களையோ அவர்களால் காட்ட முடியுமா?பிரதமர் நரேந்திர மோடிக்கு இதுவரை, 13 நாடுகளில் சர்வதேச விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில், ஆறு நாடுகளில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக உள்ளனர்.

அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமா கூறியுள்ள கருத்து அதிர்ச்சியளிப்பதாக உள்ளது. மற்ற நாடுகளுடன் நல்ல நட்புறவு இருக்க வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது.

அதே நேரத்தில், ஒபாமாவின் கருத்துக்கு மிகவும் பணிவுடன் பதிலளிக்க விரும்புகிறேன்.

அவர் அமெரிக்க அதிபராக இருந்த காலத்தில்தான், ஆறு முஸ்லிம் நாடுகள் மீது, 26 ஆயிரம் குண்டுகள் வீசப்பட்டன. அவரது குற்றச்சாட்டுகளை மக்கள் எப்படி நம்புவர்? இவ்வாறு அவர் கூறினார்.

உலக செய்திகள்

# 2025 பீபா கழக உலகக்கிண்ணம் அமெரிக்காவில்

கழகங்களுக்கு இடையிலான பீபா உலகக் கிண்ணத் தொடரின் 2025ஆம் ஆண்டுக்கான தொடர் ஐக்கிய அமெரிக்காவில் நடைபெறும் என பீபா அறிவித்துள்ளது.

2000ஆம் ஆண்டு முதல் நடைபெறும் கழக உலகக் கிண்ண சுற்றுப்போட்டிகளில் இதுவரை தலா 07 கழகங்களே இப்போட்டிகளில் பங்குபற்றிவந்தன. 2025 கழக உலகக் கிண்ணப் போட்டிகளில் முதல் தடவையாக 32 கழகங்கள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனால், தொடர்ச்சியாக 03 வருடங்களாக உலகின் 03 பெரிய கால்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் ஐக்கிய அமெரிக்காவில் நடைபெறவுள்ளன. 2024ஆம் ஆண்டு கோபா அமெரிக்கா தொடரை ஐக்கிய அமெரிக்கா நடத்தவுள்ளது.

2026ஆம் ஆண்டு பீபா உலகக் கிண்ண சுற்றுப்போட்டியை கனடா, மெக்ஸிக்கோவுடன் இணைந்து ஐக்கிய அமெரிக்கா நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு தகுதிபெற்ற இலங்கை

## ஸ்கொட்லாந்துடன் இன்று இறுதி லீக் ஆட்டத்தில் மோதல்




ஐ.சி.சி. உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் தகுதிகாண் சுற்றில் ஆடும் இலங்கை அணி சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு ஏற்கனவே தகுதிபெற்றிருக்கும் நிலையில் இன்று தங்களது இறுதி லீக் போட்டியில் ஸ்கொட்லாந்து அணியை எதிர்கொள்கிறது. இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி பகல் 12.30 மணிக்கு புலவாயோ நகரில் ஆரம்பமாகிறது.

சிம்பாப்வேயில் ஒருநாள் உலகக் கிண்ணத் தகுதிகாண் சுற்றுத் தொடர் நடைபெற்று வருகின்றது. இந்த சுற்றுத் தொடரில் மொத்தம் 10 அணிகள் போட்டியிட்டு வரும் நிலையில், தொடரில் பங்கெடுக்கும் அணிகளுக்கான குழுநிலைப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

ஒருநாள் உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றுத் தொடரின் சுப்பர் சிக்ஸ் சுற்றுத் தொடரில் விளையாடும் ஆறு அணிகளும் உறுதி செய்யப்பட்டிருக்கின்றன. இதில் சிம்பாப்பே, மேற்கிந்திய தீவுகள் மற்றும் நெதர்லாந்து ஆகிய அணிகள் குழு ஏ இலிருந்தும் இலங்கை, ஸ்கொட்லாந்து மற்றும் ஓமான் ஆகிய நாடுகள் குழு பி இலிருந்து சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு தெரிவாகியிருக்கின்றன.

அதன் அடிப்படையில் ஐக்கிய அமெரிக்கா, நேபாளம், அயர்லாந்து மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகியவை உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றுத் தொடரில் இருந்து வெளியேறுவதோடு, இந்த ஆண்டுக்கான ஒருநாள் உலகக் கிண்ண தொடரில் விளையாடும் வாய்ப்பினையும் இழக்கின்றன.

சுப்பர் சிக்ஸ் சுற்றில் இரு குழுக்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட அணிகள் ஏனைய குழுவில் இருக்கும் அணிகளுடன் தலா ஒரு போட்டி வீதம் ஆடவிருக்கின்றன. இதில் இரு அணிகள் இறுதிப் போட்டிக்கு தெரிவாகுவதோடு குறித்த இரண்டு அணிகளும் இந்த ஆண்டுக்கான ஒருநாள் உலகக் கிண்ணத்தில் விளையாடும் வாய்ப்பை பெறும்.

# மாரடைப்பால் உதைபந்து வீரர் செட்ரிக் ரூசல் உயிரிழப்பு




பெல்ஜியம் நாட்டை சேர்ந்த முன்னாள் உதைபந்து வீரர் செட்ரிக் ரூசல் 45ஆவது வயதில் மாரடைப்பால் உயிரிழந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

செட்ரிக் ரூசல். இவர் La Louviere அணிக்காக 107 போட்டிகளில் 49 கோல்கள் அடித்துள்ளார். மேலும், 1994ஆம் ஆண்டு முதல் 2010 வரை பல கிளப்களில் விளையாடியுள்ளார். 2015ஆம் ஆண்டில் தனது 37ஆவது வயதில் ஓய்வு பெறுவதாக ரூசல் அறிவித்தார்.

அதன் பின்னர் ரியல் எஸ்டேட் தொழிலில் அவர் இறங்கினார். இந்நிலையில் மாரடைப்பால் பாதிக்கப்பட்ட ரூசல் 45 வயதில் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. பெல்ஜியம் அரசு, செட்ரிக் ரூசலின் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் தங்கள் இரங்கலை தெரிவிப்பதாக அறிவித்துள்ளது.

# ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு கிரிக்கெட் தொடர்

நா.தினுஷா

தெல்தோட்டை, அனுரடெனியல்கம டைடன்ஸ் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் புனித ஹஜ் பெருநாளை முன்னிட்டு அல்-ஹூதா மாபெரும் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 2ஆம், 3ஆம் திகதி மெதகெகில விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஹூதா ரோயல்ஸ், ஹூதா வைக்கின்ஸ், ஹூதா கேப்பிடல்ஸ், ஹூதா கிலேடியேட்டர் மற்றும் ஹூதா கிங்ஸ் என 05 அணிகளுக்கிடையில் குறித்த இரு நாள் கிரிக்கெட் தொடர் நடத்தப்படவுள்ளது. சமத்துவம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக இப்போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# விமானப்படையின் ஆண்டுக்கான சிறந்த வீரர்கள் கௌரவிப்பு



2023ஆம் ஆண்டின் விமானப்படையின் சிறந்த விளையாட்டு வீர, வீராங்கனைகளை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் விமானப்படை தலைமையகத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விமானப்படை விளையாட்டு கவுன்சிலின் தலைவரும் மற்றும் பாதுகாப்பு சேவைகள் விளையாட்டு வாரியத்தின் தலைவரும் விமானப்படை தளபதியுமான எயார் மார்ஷல் சுதர்சன் பத்திரன கலந்து கொண்டார்.

இதன்போது விமானப்படை ரக்பி, மல்யுத்தம், குத்துச்சண்டை, ஜூடோ, கேரம், பீச் வாலிபால், ஸ்குவாஷ், டேக்வாண்டோ மற்றும் சைக்கிள் ஓட்டுதல் ஆகிய விளையாட்டுகளில் வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர். இந்த விளையாட்டு வீரர்கள் தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு சம்பியன்ஷிப் போட்டிகளில் சிறந்து விளங்கினர்.

இதேவேளை, தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் சிறந்து விளங்கிய திறமையான விளையாட்டு வீரர்களுக்கு விமானப்படை விளையாட்டு கவுன்சில் விசேட பரிசுகளை வழங்கியது. நிகழ்வில் விமானப்படை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் எயார் வைஸ் மார்ஷல் நிஷாந்த திலகசிங்க மற்றும் விமானப்படை வலைப்பந்து சம்மேளனத்தின் செயலாளர் குரூப் கப்டன் கிரிஷாந்த பெர்னாண்டோ ஆகியோருக்கு விமானப்படை தளபதியினால் 'நைட்' என்ற கௌரவ பட்டம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் தலைமை தளபதி, பிரதி தலைமை தளபதி, விமானப்படை முகாமைத்துவ சபை உறுப்பினர்கள், விளையாட்டுப் பணிப்பாளர், விளையாட்டுப் பிரிவு தலைவர்கள், செயலாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் தொடர்புடைய விளையாட்டுத் துறைகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் குழுவினர் கலந்துகொண்டனர்.

# மண்முனை தென்மேற்கு கோட்ட விளையாட்டுப் போட்டியில் அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் சம்பியன்



கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட மண்முனை தென்மேற்கு கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வு கடந்த புதன்கிழமை (21) அரசடித்தீவு விக்னேஸ்வரா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் மொத்த புள்ளிகள் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற பாடசாலைகளுக்கு வெற்றிக் கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. இதில் அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் முதலிடத்தினைப்பெற்று இவ்வருடத்துக்கான சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இறுதிநாள் நிகழ்ச்சியை சிறப்பித்து, மண்முனை தென்மேற்கு கோட்டத்துக்குட்பட்ட ஆசிரியர் அணியினருக்கும் உடற்கல்வி ஆசிரியர், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் அணியினருக்கும் இடையில் கிரிக்கெட் போட்டி இடம்பெற்றது. இதன்போது, உடற்கல்வி ஆசிரியர், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் அணியினர் வெற்றியீட்டியது.

கோட்டக்கல்விப் பணிப்பாளர் மூ.உதயகுமாரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கோட்டத்துக்குட்பட்ட அதிபர்கள், ஓய்வு நிலை அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7